காந்தி விஜய வெளியீடு.

# பெண்களுக்கு

ராஜகுமாரி அமிர்த கவுர்

திப்பாசிரியர் தினமணி வெளியீடு
பி. ஸ்ரீ. 33

1946

விலை அணா 6.

# பெண்களுக்கு

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

ராஜகுமாரி அமிர்த கவுர்

3652

1946

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

தேசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்
பாகனேரி

பதிப்பாசிரியர்
பி. ஸ்ரீ.

தினமணி வெளியீடு
33

# பொருளடக்கம்


பதிப்புரை

முன்னுரை—பியாரிலால்

ஆசிரியர் முகவுரை

I. நகரவாசிகளுக்கு

1. வைத்திய உதவி
2. கல்வி
3. கைத்தொழில்கள்
4. ஹரிஜனங்கள்
5. தொழில்
6. எளிய வாழ்க்கை
7. பால்ய மணம், பலதார மணம், கோஷா முறை
8. பொதுவான சட்டம்
9. சுதேசியம்
10. தாய்மொழி
11. குடித்தல், புகைபிடித்தல், சூதாடல்
12. விபசாரம்
13. சமூக ஒற்றுமை

II. கிராம ஊழியர்களுக்கு

III. உத்தியோகமும் பொதுவாழ்வும்

IV. இந்திய சமஸ்தானங்கள்

V. சர்வ தேசத்துவம்

VI. முடிவுரை


3652.

# பதிப்புரை

ஸ்ரீ ராஜகுமாரி அமிர்த கவுர் எழுதியுள்ள 'To Women' என்ற நூலின் மொழி பெயர்ப்பு இது. ராஜகுமாரி அமிர்த கவுர் ராஜ குலத்தில் பிறந்தவர். காலஞ்சென்ற ராஜா ஸர் ஹரிநாம சிங்கின் அருமைப் புதல்வியார். கபூர்த்தலா மகா ராஜாவின் மருமகள். இவருடைய சகோதரர்களெல்லாம் அரசாங்கத்தில் முக்கியமான ஸ்தானங்களை வகித்திருக்கிறார்கள். மூத்த சகோதரர் ராஜா ஸர் மகாராஜ் சிங் ஐக்கிய மாகாண அரசாங்க உறுப்பினராயிருந்து, இப்போது தொழிற்கட்சித் தலைவரா யிருக்கிறார். வேறொரு சகோதரர் ஸர் துலீப்சிங் பஞ்சாப் ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்றவர்; இன்னொருவர் கர்னல் ஸாம்ஷேர் சிங் என்பவர் ஐ. எம். எஸ். ஆபீஸராக இருந்தவர்.

இப்பேர்ப்பட்ட குடும்பத்தில் பிறந்தவராயினும், தேசபக்தியும் மாதர் சேவையும் அமிர்த கவுரைத் தொண்டுசெய்யத் தூண்டிவிட்டன. இந்திய மாதர் நலனுக்காகப் பல வருஷங்கள் சலியாது உழைப்பவர். மகாத்மா காந்தியிடம் சிறந்த பக்தி விசுவாசம் உடையவர். சமீபத்தில் இவர் இங்கிலாந்தில் நடந்த கல்வி மகாநாட்டுக்கு இந்திய சர்க்காரின் சார்பாகச் சென்று வந்தார். சென்னையில் இவ்வாரம் நடக்கும் ஹிந்தி பிரசார சபையின் வெள்ளி விழாவை ஒட்டிய பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் செய்ய விஜயம் செய்திருக்கிறார்.

இந்தச் சிறு நூலில், மாதர்கள் சமூக சேவையில் எப்படி உதவ முடியும் என்பதை எழுதியிருக்கிறார். மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்திலுள்ள சில அம்சங்களுக்கு இதை விளக்கமாகக் கருதலாம். நிர்மாணத் திட்டத்தில் ஈடுபட விரும்பும் பெண்களுக்கெல்லாம் இந்நூல் தக்க துணையாகும். இதைத் தமிழில் வெளியிட அனுமதித்த அலஹபாத் நவஜீவன் பதிப்பகத்தாருக்கும், சென்னைக் கஸ்தூரிபா நிதிக் கமிட்டியாருக்கும் எங்கள் நன்றி.

21—1—'46. பி. ஸ்ரீ.

# முகவுரை

**அஹிம்ஸை** முறையில் இந்தியா தனது சுதந்திரத்தை அடைவதாயின், அந்தப் போராட்டத்தில் பெண்களும் பெரும் பங்கு கொள்ளவேண்டும்; ஏனெனில் பெண் அஹிம்ஸையின் சின்னம். க்ஷமிப்புத் தன்மையும், சகிப்புத் தன்மையும் அவளுடைய சிறந்த முத்திரை. ஆதலால், ஸாத்விக இயக்கம் அவளைத் தேசீயப் போராட்டத்தின் முன்னணியில் கொண்டு வந்து விட்டிருக்கிறது. நமது மாதர் சமூகத்தில் மாபெருஞ் சக்திக் களஞ்சியம் இருக்கிறது. ஆனால் இன்றோ அது அறியாமை, மூட நம்பிக்கை, வீட்டு அடிமைத்தனம் இவைகளின் கீழே புதைந்து கிடக்கிறது. இதிலிருந்து அந்தச் சக்தியை விடுவித்துத் தேசீயப் போராட்டத்தில் அதைப் பயன்படுத்த வேண்டியது, தேச நலனுக்காக உழைக்கும் ஒவ்வொரு ஊழியரின் கடமையாகும். தம்முடைய நிர்மாணத் திட்டத்தின் பதினைந்து அம்சங்களில், காந்திஜீ இதற்கு முக்கிய ஸ்தானம் கொடுத்திருப்பதில் அதிசயமில்லை.

இந்தத் துண்டுப் பிரசுரத்தின் ஆசிரியரான ராஜகுமாரி அமிர்த கவுர் மாதர் நலனுக்காகச் சலியாது உழைப்பவர். தீவிர சேவையிலிருந்து பலவந்தமாகத் தடுத்துவைத்ததின் விளைவுதான் இந்த நூல். 1942 ஆகஸ்டில் கைது செய்யப்பட்டுச் சிறை சென்றவர்களில் முதல் கோஷ்டியைச் சேர்ந்தவர். இவர் அனுபவத்திலிருந்து எழுதுகிறார்.

மேலும் இவர் எழுத்துக்களில் இவரது அனுபவத்தின் வரையறைகளும் தென்படுகின்றன. இவர் கூறும் சீர்திருத்த ஆலோசனைகள் ஒட்டு வெட்டுகளுக்கு இடந்தருகின்றன. இவருடைய நோக்கமே, இந்தப் பிரசினை மீது ஆர்வத்தை உண்டாக்குவதும், கவனத்தைத் திருப்புவதுமேயாம்; ஊழியர்களுக்குத் திட்டவட்டமான குறிப்புக்கள் கொடுப்பதல்ல.

மகாபலேச்வர்,
28—5—1945

பியாரிலால்

# முன்னுரை

365 உ.

பலவருஷகாலமாக நான் மாதர் நலனுக்காக உழைத்து வந்திருக்கிறேன். அந்தக் காலத்தில் என்னிடம் படித்தவர்களும், செயலுள்ளவர்களுமான மாதர்கள் தாழ்ந்த நிலையிலுள்ள சகோதரிகளுக்கு எவ் வித்தில் பணி புரிவது என்று கேட்டிருக்கிறார்கள். யாருடன் நான் நெருங்கி வாழ்கிறேனே, எங்கு நான் சேவை செய்ய முயலுகிறேனே, அந்தப் பட்டணத்துப் பெண்களிடமிருந்துதான் இந்தக் கேள்வி எழுந்திருக்கிறது. என்னோடு உழைக்கும் அகில இந்திய மாதர் சங்கத்தாருக்கு ஏதேனும் பயன் படலாம் என்ற நம்பிக்கையோடு, என் எண்ணங்களையும் கருத்துக்களையும் நான் காவலில் இருந்தபோது இந்தச் சிறு நூலில் வெளியிட முயன்றேன். மற்றவர்களுக்கு — முக்கியமாக இளம்பெண்களுக்கு—இந்நூல் பொதுநலனுக்காக வாழ்க்கையை அர்ப்பணிக்கும்படி தூண்டக்கூடும் என்பதும் ஒரு நம்பிக்கை. இந்தச் சேவை எவ்வளவு மகத்தானதோ, அவ்வளவு நல்லதுங்கூட. தன்னலமற்ற தியாக ஊழியர்கள் பலர் இதற்குத் தேவை.

ஸிம்லா,
1943.

அ. க.

# I

## நகரவாசிகளுக்கு

நம் நகரத்திலுள்ள ஏழைப்பட்ட பெண்களோடு முற்றும் தொடர்பற்றிருக்கிறோம் என்பதை ஒப்புக்கொண்டால்,—ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும் என்று நான் நினைக்கிறேன்—நம் முன்னுள்ள முதல் வேலை அவர்களோடு நேர்முகமான தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியதுதான் என்பதை உணர்வோம். நகரத்தின் ஒரு பகுதியில் யாரேனும் ஒருவர் சென்றால், முதலில் அதிசயத்தோடு எதிர் கொள்ளப்படுகிறார்; ஆனால், சேவை செய்வதற்கென அங்கு மீண்டும் மீண்டும் சென்றால், சீக்கிரத்தில் அங்கு அந்யோன்யம் உண்டாகிறது. இது நான் கண்ட அனுபவம். ஏனெனில் அறியாமையையும் சந்தேகத்தையும், சேவையினாலும் அன்பினாலும்தான் போக்க முடியும்.

குழந்தைகளைக் குளிப்பாட்டுவதும், வீடு பெருக்குவதும், நோயாளிகளுக்கு வைத்திய உதவிக்கு வசதியளித்தலும், கல் நெஞ்சர்களையும் கரைத்துவிடும். கொஞ்சங் கொஞ்சமாகப் பலர்பலன் நெஞ்சைத் தொடும் வகையில் ஏற்படுகிறது. ஏழைகள் கருணையுள்ளம் படைத்தவர்கள். ஒரு சிறு ஊழியர் கூட்டமாவது தினந்தோறும் எங்கேனும் ஒரு நகரப் பகுதிக்குச் சென்று அங்குள்ள பெண்டு பிள்ளைகளுக்குச் சேவை புரிந்தால், அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடமிருந்தும் அழைப்புக்கள் வந்துவிடும். ஒருதடவை இந்தச் சேவையில் இறங்கிவிட்டால், சேவையின் பரப்பு விரிந்துவிடும். பிறகு 'என்னத்தைச் செய்வது?' என்ற பிரசினை மறைந்து, இத்தனை தேவையையும் எப்படிச் சமாளிப்பது என்றாகிவிடும்.

என்னுடைய நகரத்துச் சகோதரிகளை நான் கேட்டுக்கொள்வது என்னவெனில், அவர்களுடைய ஓய்ந்த நேரத்தின் ஒவ்வொரு கணத்தையும், நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் விரும்பி நிற்கும் ஏழைப் பெண்களுக்குச் செலவிடும்படி வேண்டுகிறேன். பட்டணத்திலுள்ள

படித்த பெண்களின் வாழ்நாளெல்லாம் சொந்த அலுவல்களுக்கே சரியாய்ப் போய்விடுகிறது; தேவைப்பட்ட மக்களுக்குச் சேவை செய்ய நேரம் கிடைப்பதில்லை. செயலுள்ள பெண்களோ விருந்துகளிலும் சினிமாக்களிலும், கடைகளிலும் கிளப்புகளிலும் வீதியிலுந்தான் நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றனர். ஆனால் தாழ்த்தப்பட்ட நம் சகோதரிகளிடையே இவர்களைக் காண்பது அரிது. அவர்களின் அறியாமையையும் மூட நம்பிக்கையையும் ஒழித்து அவர்கள் க்ஷேமத்தைக் கவனிப்பதில்தான் நமது விடுதலையின் நம்பிக்கையு மிருக்கிறது. இவ்விஷயத்தில் நம்மில் சிலரிட்முள்ள அசிரத்தையைப் போக்க வேண்டும். ஊக்கம் படைத்தவர்கள் உழைப்பிலிறங்க வேண்டும். நம்மில் பலர் ஒருவேளை உணவின்றி, உடுக்கத் துணியின்றி, படுக்க இடமின்றி, பிள்ளைக்குப் பாலின்றித் துயரப்படும்போது, வேறு சிலர் உண்டியிலும் துணிமணிகளிலும் நகை நட்டுக்களிலும் வேறு விருதாச் செலவுகளிலும் பணத்தைச் செலவழிப்பதை எண்ணிப் பார்த்தால் பயங்கரமா யிருக்கிறது. இந்தியாவின் வறுமையின் வலியும், அறியாமையின் ஆழமுமே தற்போதைய துன்ப நிலைமைக்குக் காரணம் என்பதை மறுத்துப் பேசமுடியாது. நம்முடைய சுரண்டல்தனத்தின் மூலபலத்தை விட்டு நாம் விடுதலைபெற்ற பிறகு, பொருள் மதிப்பைவிட நியாய மதிப்புக் கொண்ட கட்டுக்கோப்பில் அஸ்திவாரம் கோலவேண்டும். அப்படிச் செய்யும் வரையிலும் முன்னே கூறியுள்ளதைத் தள்ளிவிட முடியாது. ஆனால் இங்கும் அங்கும் நாட்டில் பரவியிருக்கும் இருளை விரட்டி நன்னாளின் அருணோதய காலத்தைத் துரிதப்படுத்த முடியும்.

இந்த வேலைக்காக நாமெல்லாம் நமது சக்தியையும் பொருளையும் புத்தியையும் கொண்டு உழைக்க வேண்டியது கடமை.

ஒவ்வொரு நகரிலும் சமூக சேவைக்கென்று அர்ப்பணித்த மாதர் சங்கம் ஒன்று இருக்கவேண்டும். இந்தச் சங்கத்தையும் பல கிளைச் சங்கங்களாகப் பிரித்து ஒவ்

வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட வேலை கொடுக்க வேண்டும். நகரின் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள குழந்தைகள், நோயாளிகள், விதவைகள், கூலிப்பெண்கள், நல்ல தண்ணீர் வசதி, வைத்திய உதவி, கல்வி, மனிதர்கள் வாழ்வதற்கு லாயக்கற்ற குடியிருப்புகள், குடும்பங்களின் சம்பாத்தியம், அவர்களுடைய வேலை நேரங்கள் முதலியவைகளைப் பற்றிப் புள்ளி விவரங்கள் தயாரிக்க வேண்டும். அந்தப் பெண்களின் தேவைகளைப் பற்றி நமக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தாலொழிய அவர்களுக்கு உதவுவது கஷ்டம். அவர்களோடு தொடர்புகள் ஏற்பட்டபின், சிறு சிறு கூட்டங்கள் கூட்டிப் பெண்களுக்குச் சுகாதாரம், சிசு பாலனம், உணவு, சௌஜன்யம், நோய் வராது தடுத்தல், ஒழுக்கம், தீண்டாமையின் தீமைகள், பால்ய மணம், விசேஷ நாட்களில் ஊதாரிச் செலவு முதலியவைகளைப் பற்றிப் பேசலாம். அறிவின்மையைக் நீக்கக் கல்வி, நூற்றல், நெய்தல், கூடை முடைதல், விளையாட்டுப் பொருள் செய்தல் முதலியவற்றைக் கற்றுக்கொடுக்கவும், வேறு ஏதேனும் கைத்தொழில் சொல்லிக் கொடுக்கவும், வகுப்புகள் நடத்தலாம். நம்முடைய நாடு எவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிறதென்பதையும் நாட்டு விடுதலைக்குப் பெண்கள் செய்யவேண்டியது என்னவென்பதையும் பெண்மக்கள் அறியும்படி செய்யவேண்டும். தம் சக்தியைத் தாமுணரச் செய்யவேண்டும்.

ஸ்தூல பலத்தின் கொடுமைகளை ஆத்ம வலிமையால் எதிர்த்து நிற்க முடியும் என்ற நம்பிக்கையை நம்முள் வளர்த்தாலன்றி,—ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆண்களின் ஆக்கிரமிப்பு நம் மனசிலே ஏற்படுத்திவிட்ட தோல்வி - மனப்பான்மையைச் சிதற அடித்தாலன்றி,— 'வலிமையே உரிமை' என்பதில்லை என்று சொல்லக்கூடிய உலகை ஒருபோதும் உண்டாக்க முடியாது என்பது என்னுடைய முடிவான தீர்ப்பு.

## வைத்திய உதவி

நகர வட்டாரங்களில் பெண்களுக்கென்று வைத்திய சாலைகள் இருக்கின்றன. எனினும் என் அனுபவத்தில் எங்கள் ராஜதானியிலே ஏழை மக்களுக்கு வேண்டிய உதவி கிடைக்கவில்லை. மேலும், வைத்தியசாலை செல்வதற்குப் பிரயாணச் செலவையும், வைத்தியசாலையில் அனுமதித்தபின் ஏற்படும் செலவையும் கொடுக்க முடிவதில்லை. நோயைத் தடுப்பதற்கான வழிகளும், சுகாதார முறைகளைப்பற்றிய ஆரம்ப விதிகளும் அவர்களுக்குத் தெரியாது. ஏமாற்று வித்தைகளுக்கும் அவர்கள் அடிக்கடி பலியாகிறார்கள். வைத்திய உதவி கிடைப்பதாயிருந்தாலும், ஆண் வைத்தியர்களைப் பரிசோதிக்க விடுவதில்லை. சுகாதார விதிகளை யறியாத திறமையற்ற மருத்துவச்சி, பலமுறை கேடு விளைவித்துவிடுகிறாள். இம்மாதிரியான துயரக் கதைகள் ஏற்படாமலிருக்க வேண்டுமெனில், சர்க்காரின் கண்காணிப்பிலாவது ஒவ்வொருவருக்கும் பயன்படும் முறையில் வைத்திய உதவி அளிக்கப்படவேண்டும். நம் சங்கத்தார் எந்த நிலையிலும் டாக்டர்களின் அவசர உதவியை நாடும் பெண்களை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க உதவி செய்ய முடியும். ஆஸ்பத்திரியிலிருக்கும்போதும், வீட்டில் உடம்பைத் தேற்றிக் கொள்ளும் காலத்திலும் அவர்களுக்கு உணவுக்கும் மருந்துகளுக்கும் உதவும் முறையில் நிதி சேகரிக்க வேண்டும்.

வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே சிறந்ததாதலின், நமது வட்டாரத்திலுள்ள பெண்களுக்குச் சுகாதாரத்தின் சாதாரண விதிகளைப் போதிக்க முயல வேண்டும். வறுமையின் காரணமாக அவர்கள் சுத்தமாயிருப்பது சிரமமான காரியம். அவர்களுடைய ஆடைகளை வெளுப்பதற்காக நான் பல தடவை கொடுத்த சோப்புகளை அவர்கள் விற்று வயிற்றுக்கு உணவு தேடிக் கொள்ளுகிறார்கள். அசுத்தமே வியாதிக்குக் காரணம் என்பதை உணராத காரணத்தினால் குழந்தைகளைக்

குளிப்பாட்டாமலும், வீடு பெருக்காமலும், இருக்கிறார்கள். மேலும், தெருக்குப்பை, சாக்கடை நாற்றம், க்க்கூஸ்களின் சுகாதாரமற்ற நிலை முதலியவைகளையும், தெருக்களில் குழந்தைகள் மலஜலம் கழிப்பதையும் அவர்கள் கவனிக்காமலிருக்கவும் ஹேதுவாகிறது. நகரத்தின் சந்து பொந்துகளிலுள்ள ஏழை மக்களிடம் மட்டும் இந்த நிலைமை காணப்படவில்லை, பிறரிடமும் காணப்படுகிறது. இத்தகைய அறியாமையையும் அசிரத்தையையும் எதிர்ப்பது நமது கடன். இது சிரமமான காரியம். இதற்கு நேரம் வேண்டும்; பொறுமை வேண்டும்; நிதி வேண்டும். ஆனால் மனசோடு நாம் இதில் முனைந்தால், நல்ல பயன் கிடைக்கும்.

பல பெரிய நகரங்களில் இப்பொழுது மாதர் - சுகாதாரப் பார்வையாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் செய்யக்கூடிய சேவை முக்கியமானது. சமூகத்தில் பெண்டு பிள்ளைகளின் தேகாரோக்கியத்திற்கென்று அமைந்தவை சிசு பரிபாலன - பிரசவ நிலயங்கள். நம் நகரங்களில் அவை சமீபத்தில்தான் தோன்றியிருக்கின்றன; அவைகளின் தொகையும் மிகக் குறைவு.

இருபது வருஷங்களுக்கு முன் நான் ஆரம்பித்த ஒரு நிலயம் பல இடையூறுகளுக்கிடையே நடைபெற்று வருகிறது. முதலில் நகரபரிபாலன சபையாரிடமிருந்து பொருளுதவி பெறுவதே பெருஞ் சங்கடம். ஸ்திரீ சுகாதாரப் பார்வையாளர், பணங்கொடுப்பவர்களின் அழைப்புக்கெல்லாம் போய் ஆகவேண்டிய தொழில்-மருத்துவச்சி அல்ல என்பதையும், இலவசமாக அவருடைய சேவையைப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஏற்பட்டிருக்கவில்லையென்பதையும் எல்லோரும் உணரச் செய்வதே ஒரு பிரசினை. முடிவாக இந்த நிலயம் ஸ்தல வைத்திய உத்தியோகஸ்தரை ஆலோசகராகவும், சுகாதார வைத்திய உத்தியோகஸ்தரைக் காரியதரிசியாகவும் கொண்ட சுகாதார - மாதர் கூட்டத்தாரால் சில வருஷங்களாக நன்றாய் நடத்தப்பட்டு வருகிறது.

ஸ்திரீ சுகாதாரப் பார்வையாளர் நகரத்திலுள்ள ஏழைப்பெண்களின் பிரசவங்களேயே கவனிக்கவேண்டும். பிரசவ காலத்திலும், அதன்பின்பும் கவனிக்கவேண்டு வது அவர் பொறுப்பு. அவர்கள், மருத்துவச்சிகளுக்கும் பயிற்சியளித்து இவர்கள் அத்தாட்சி பெற்றபின் அந்த வட்டாரத்திலுள்ள கர்ப்பிணிகளோடுதொடர்புகொள்ளச் செய்கின்றனர். மேலும் மருத்துவச்சிகளுக்குத்தொடர்ச்சி யாகப் பயிற்சி வகுப்புக்கள் நடத்துகிருர்கள். அவர்களுக் கெல்லாம் தேவையான கருவிகள் அடங்கிய சிறு பெட் டிகள் கொடுக்கிருர்கள். கஷ்டப் பிரசவங்களேயெல்லாம் நகர ஆஸ்பத்திரியின் லேடிடாக்டரைக் கொண்டு கவ னிக்கச் செய்கிருர்கள். அவர்களுக்கு நகருக்குள்ளேயே இரண்டு நிலயங்கள் உண்டு; பக்கத்துக் கிராமங்களிலும் இரண்டுநிலயங்கள் உண்டு. அவர்கள் மருத்துவச்சி களேத் தங்களுடைய சொந்தக் கிராமங்களிலேயே தொழில் செய்யும்படி பழக்குகிருர்கள். மூன்று வயது வரைக்குமுள்ள குழந்தைகளே ஒழுங்காகப் பரிசோதித்து நிறையெடுக்கிருர்கள். குழந்தைகளுக்கும் தாய்மார்களுக் கும் பால், பழ ரசம், மீனெண்ணெய் (காட் லிவர் ஆயில்) முதலியன வாங்குவதற்காக ஊரில் நிதி திரட்டுகிருர்கள். துணிமணிகள், பழந்துணிகள், கம்பளியுடைகள் முதலிய வற்றையும் இனமாகப் பெறுகிருர்கள்.

மேலும் பண உதவியும், பயிற்சி - உதவியும் கிடைத் தால், இந்த வேலேயை இன்னும் விரிவடையச் செய்ய லாம். ஏனெனில் ஒரு ஸ்திரீ-பார்வையாளரே லக்ஷம்பேர் கொண்ட ஒரு நகரைக் கவனித்துக்கொள்ள முடியாது. நகர பரிபாலனத்தின் சுகாதார நிலயங்களில் மேற்பார் வையை இந்த மாதர் - கூட்டம் ஒப்புக்கொண்டு வேலே யைச் சரிவர நடத்த அவர்களிடமிருந்தே பணம் பெறு வது நலமென்று என் அனுபவத்திலிருந்து கருதுகிறேன். பயிற்சியற்றவர்களே வேலேசெய்ய விடக்கூடாது. நாம் நம் முடைய மாதர்களுக்கு மருத்துவச்சி - வேலே கற்றுக் கொள்ளவும், சுகாதாரப் பார்வையாளராக வேலே கற்

கவும் ஊக்கமளிக்க வேண்டும். அதேபோல், லேடி டாக்டர்களாகவும் நர்ஸுகளாகவும் பயிற்சி பெறச் செய்யவும் வேண்டும்.

நர்ஸாக இருப்பது பெண்களுக்கு உகந்த தொழில். ஆனால், நம்முடைய சமூகத்தின் குறுகிய மனப்பான்மையால் உயர்குலப் பெண்கள் இதை அவமதிக்கிறார்கள். இந்த மகத்தான தொழில் எவ்வளவு முக்கியமென்பதையும் அவசரத் தேவை என்பதையும் உணர்ந்து, நமது பெண்களை இதில் புகச் செய்வதற்கு இதுவே தருணம்.

பிரதம சிகிச்சை, வீட்டு வைத்தியம், பத்திய உணவு முதலியன பற்றிய பாடங்களை நமது வட்டாரங்களிலுள்ள பெண்களுக்குக் கற்றுக் கொடுக்க வழி செய்ய வேண்டும். அவர்களுக்குச் சத்து உணவுகளைப்பற்றியும், திரிகைமா, கைக்குத்தரிசி, பச்சைக் காய்கறி, கீரை முதலியவைகள் நம்முடைய உணவு வகையில் எவ்வளவு முக்கியமான அம்சங்கள் என்பது பற்றியும் கற்றுக் கொடுக்க வேண்டும். நம்முடைய நகர பரிபாலன சபையார் மூலமாக, கர்ப்பிணிகளுக்கும் கைக்குழந்தைகளுக்கும் இலவசப் பால் விநியோகம் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டும். பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளுக்கு வைத்திய சோதனை நடத்தவும், பள்ளிக்கூடங்களில் தேகப்பயிற்சி அளிக்கவும் வசதி வேண்டும். வைத்திய முறைகளில் நம்முடைய டாக்டர்களுக்கு ஆராய்ச்சி நடத்த வசதி இருக்கிறது. அதை அவர்கள் பயன்படுத்தி நலன் விளைக்க வேண்டும்.

---

## கல்வி

நம் நாட்டில் இன்றுவரையில் உள்ள கல்வி முறை போதுமானதும், சரியானதும் அல்ல என்பதில் ஐயம் இல்லை. முனிஸிப்பல் பெண் பாடசாலைகளுக்கென்று ஏற்பட்டுள்ள அநேக இடங்கள் அதற்கு முற்றிலும் லாயக்கற்றவை. அந்த இடங்கள் நெருக்கடியானவை. வெளிச்சத்துக்கும், காற்றுக்கும், மைதானங்களுக்கும் அங்கு இடமே போதாது. உபாத்தியாயரின் திறமையும் ரொம்பக் குறைவு. பெற்றோர்களும் தம் பெண்கள் ஆண் பிள்ளைகளைப்போல் படிக்கவேண்டும் என்பதை உணர்வதில்லை. பக்கத்திலேயே பள்ளிக்கூடம் இருந்தாலும் அங்கே பெண்களை அனுப்புவதற்கும் அவர்களுக்கு அக்கறை இருப்பதில்லை. படித்துக்கொண்டிருக்கும் போதே பெண்களைக் கலியாணத்திற்கென்றும், வீட்டு வேலைக்கென்றும், பள்ளிக்கூடத்துக்குச் செல்லவிடாமல் நிறுத்திவிடுகிறார்கள். இதன் விளைவால் மீண்டும் பெண்கள் கல்வியறிவில்லாமல் போய்விடுகிறார்கள்.

இப்பொழுது நாம் அந்தந்த வட்டாரங்களில் ஆறு அல்லது ஏழு வயசு முதல் 14 வயசுவரையிலுள்ள பெண்களுக்கு அடிப்படைக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கான வழிகளைச்செய்ய நகர பரிபாலனத்தாரைத் தூண்ட வேண்டும். வேலை தொடங்குவதில் தாமதமே கூடாது. முக்கிய விவரங்களை ஸ்ரீமதி ஆஷா தேவியின்மூலம் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். முடியுமானால், இந்த முறையில் நகர பரிபாலனத்தார் தங்கள் செலவில் வேண்டும் வசதிகள் செய்து கொடுத்து, உபாத்தியாயர்களுக்கும் சம்பளம் போட்டுக் கொடுப்பதாயிருந்தால், மாதர் சங்கத்தார் ஒரு பள்ளிக்கூடத்தையாவது மேற் பார்த்துக்கொள்ள வேண்டும். வேண்டுமெனில் மூன்று வருஷ அனுபவத்திற்குப் பிறகு, மற்றப் பள்ளிப் பிள்ளைகளைவிட அடிப்படைக் கல்விச்சாலையிலுள்ள பெண்கள் அறிவிலும், ஒழுக்கத்திலும், உடல் நலத்திலும் முன்னேறுவ

தாகத் தெரிந்தால், இந்த அடிப்படைக் கல்வி முறையை எங்கும் ஏற்படுத்தவேண்டிய நிலைமை தானாகவே ஏற்படும்.

நமது நாட்டில் பாலர் கல்விச்சாலைகள் இல்லாதது ஒரு பெருங் குறை. பெண்களுடைய ஏழைமையினாலும், அறியாமையினாலும், சின்னஞ்சிறிசுகளுக்குச் சரியான அறிவு வளர்ச்சி ஏற்படவில்லை. இம்மாதிரி நிலயங்களைச் சர்க்காரே ஏற்படுத்தும்வரை, இந்தக் குழந்தைகளுக்குத் தேவையான கண்காணிப்பையும் பரிபாலனத்தையும் எவ்வகையிலும் நம் ஸ்தாபனங்களே ஏற்றுக் கொள்ளவேண்டும். இம்மாதிரி முயற்சிகளில் பயிற்சி பெற்ற உபாத்தியாயினிகளும் தொண்டர்களும் நமக்குக் கிடைப்பதில்லை. நம்முடைய பெண்கள் கலாசாலை, கல்லூரிப் படிப்புகளை முடித்தபின்பு, தங்களுக்குக் கலியாணம் ஆகும்வரை மூன்று வருஷ காலமாவது தங்களுக்குப் பிடித்த வழியில் தொண்டுசெய்ய முன்வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். கற்றுக்கொடுப்பது ஒரு தொழில்; அதில் எல்லாரும் சிறந்தவராக முடியாது என்றும் எனக்குத் தெரியும். ஆனால், இன்றைக்குள்ள தேவையோ அபரிமிதமானது. அதைப் பூர்த்தி செய்யும் வழிகளும் மிகக் குறைவாக இருப்பதால், தொண்டர்களின் சிறந்த சேவையால்தான் அது முடியும் என்று நான் நினைக்கிறேன். கலியாணமானபிறகுகூட நமது ஓய்வு நேரத்தை நல்ல வழியில் பயன்படுத்தினால், இன்றைக்குச் செய்யும் சமூக சேவையைவிட அதிகமாகவே செய்யலாம் என்று கருதுகிறேன். ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படச் செய்வது என்பதையும் நாம் சேவைபுரிபவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம்.

முதியவர் கல்வியும் ஒரு பரந்த சேவை. இதிலும், தொண்டர்களின் முயற்சிகள் பெரிதும் பயன்படும். கல்வியறிவின்மையைப் போக்குவது கட்டாயத் தேவையாய் ஏற்பட்டுவிட்டதெனினும், முதியவர் கல்வி அந்தத் திட்டத்தில் ஓர் அம்சமே ஆகும். 25 அல்லது 30 வயது

வந்த பெண்களுக்கு கல்வியறிவு பெறவேண்டும் என்ற விருப்பமே இல்லை என்பதையும் அறிவேன். அவர்கள் ஓரளவு கற்றுக் கொண்டாலுங்கூட, சீக்கிரமே கற்ற கல்வியையும் மறந்து விடுகிறார்கள். காரணம், அவர்களுக்குப் பிடித்த இலக்கியங்கள் இல்லாமையும், வீட்டு வேலைகளுக்கே நேரம் போதாமையுமே. பொருத்தமான நூல்கள் கிடைப்பதே ஒரு தேவை. அதை நிறைவேற்ற நமது படித்த சகோதரிகள் முயல வேண்டும். முப்பது வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்களின் கல்வியறிவின்மையைப் போக்குவதற்கு நம்மால் முடிந்த வரை முயன்று பார்க்க வேண்டும் என்பதே என் எண்ணம். எங்கள் வகுப்புக்களில் நாங்கள் புஸ்தகங்களை வாய்விட்டு உரக்க வாசித்தபோது, அந்தப் பெண்களுக்கும் தாமும் அப்படிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. இதனால் உபயோகமுள்ள பல விஷயங்களைக் குறித்துப் போதிக்க முடிந்தது.

பிரஜா உரிமைக் கொள்கைகள், தேசபக்தி, தற்போதைய தாழ்ந்த நிலைமையைப் பற்றிய விஷயங்கள், அவற்றை எப்படி நிவர்த்தித்து முன்னேறுவது என்பன பற்றி யெல்லாம் கற்றுக் கொடுப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வெறும் கல்வி யறிவைவிட, பல மாதிரியான விவகாரங்களையும் போதிப்பதுதான் நிரம்ப முக்கியம் என்று தோன்றுகிறது. நம்மில் ஒவ்வொருவரும் தங்கள் நேரத்தை இதில் மனசாரச் செலவிட்டு உழைத்தால், அந்தந்த வட்டாரங்களிலுள்ள பெண்களின் முழு நம்பிக்கையையும் நாம் சம்பாதித்து விடலாம்.

## கைத்தொழில்கள்

இவைகளின் வளர்ச்சி ஒரு வகையில் பெண்களின் இன்றைய பொருளாதார நிலைமைக்கு நிவாரணம் அளிக்கும். நெய்தல், நூற்றல், விளையாட்டுப் பொருள் செய்தல், கூடை முடைதல், சாதாத் தையல், பூவேலை செய்தல் முதலியன எல்லாம் கற்றுக் கொடுக்க வேண்டிய முக்கிய தொழில்களில் சில. பெண்களுக்கு ஆடை நெய்யவும், வேறு பொருள்கள் செய்யவும் சொல்லிக் கொடுத்து விட்டால், அந்தப்பொருள்களை விற்று முதல் ஆக்குவது நமது கடமை. நூற்ற நூலும், நெய்த ஆடையும் அந்தந்த வட்டாரத்து வாசிகளுக்கே பயன்படக் கூடும். முதலில் பெண்களின் பொருளாதார நிவாரணத்திற் கென்றே உள்ள அகில இந்திய நூற்போர் கழகத்திடம் நாம் அதிக சிரத்தை காட்டாமல் இருப்பது ரொம்பவும் வருந்தத் தக்கது. ராட்டினத்தை, அஹிம்ஸா தர்மத்தின் அறி குறியாகவும், நம் நாட்டு நன்னிலையின் புனருத் தாரணத்தின் குறியாகவும் நாம் நம்பாவிட்டாலும், கிராமத்து ஏழைச் சகோதரிகளின் பொருளாதார நிலைமையை விருத்தி செய்யும் சக்தியாகவாவது நாம் அதை வரவேற்கலாம். ஆனால், நம்மில் பலருக்கோ ஆலைத்துணியும், அயல்நாட்டுப் பட்டுகளும் ஆசையூட்டுகின்றன. டெல்லியிலுள்ள லேடி இர்வின் கல்லூரியில் ஒரு கைத்தொழில் வகுப்பு ஏற்படுத்தி, பள்ளிப் பெண்களுக்கு வருவாய் தரக்கூடிய தொழிலைக் கற்றுக் கொடுக்கச் செய்ய வேண்டும் என்று நான் ரொம்ப காலமாய் விரும்பிவருகிறேன். கல்வியைப்பற்றி நான் சொல்லும்போது, 'உங்கள் பையன்களை எப்படி உத்தியோகம் பார்க்கும் அளவுக்குக் கல்விகற்க வைக்கிறீர்களோ, அந்த அளவுக்குப் பெண்களையும் படிக்க வையுங்கள்' என்று பெற்றோர்களை வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். தங்களுக்குப் பிடித்த வழியில் முற்றும் முன்னேறப் பெண்களுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப் படல் வேண்டும். நமது நாட்டில் பெண்களெல்லாம் கல்யாணமாக வேண்டியவர்களாயினும், சமூக சேவை செய்வதற்கும் ஜீவனோபாயத்திற்கும் கல்வி கற்றுக் கொள்வது நல்லது.

## ஹரிஜனங்கள்

நம் சமூகத்திடையே வாழும் இந்தத் துர்ப்பாக்கிய சாலிகளுக்குரிய சேவை நம்முடைய விசேஷ கவனத்திற்குரியது. பெண்பாலர் என்ற காரணத்தால் நாம் எப்படி நசுக்கப் படுகிறோமோ, அப்படியே ஜாதியின் பெயரால் நசுக்கப்படும் இவ் வர்க்கத்தாருக்குத் தான் நம்முடைய முழு அனுதாபமும் இயற்கையாகவே செல்ல வேண்டும். நம்முடைய நலனுக்காக யார் பாடுபடுகிறார்களோ, யாருடைய சேவை இல்லாவிடில் நாம் உயிர் வாழ முடியாதோ, அவர்களை நகர்ப்புறங்களிலிருந்து ஒதுக்கி, ரொம்பவும் மோசமான அருவருக்கத் தக்க குடிசைகளில் வாழ வைத்திருக்கிறோம் என்பதே மகா கேவலமானது. நம்மில் எத்தனைபேர் "அவர்கள் எப்படி வாழுகிறார்கள், எங்கு வாழ்கிறார்கள்? என்பதை அறியக் கவலைப்பட்டிருக்கிறோம்? பட்டணத்திலுள்ள ஏழை மக்களைவிட, அவர்களுக்கு வரும்படி ஒன்றும் குறைச்சலில்லை; எனினும் அவர்கள் புழுதியிலும் துர்நாற்றத்திலும் அறியாமையிலும் வாழ்கிறார்கள். அவைகளைப் போக்க முயல்வதே நம்முடைய உடனடியான வேலை. இன்றைக்குள்ள ஹரிஜன சேவா சங்கந்தான் நமது நாட்டிலேயுள்ள சிறந்த காருண்யம் படைத்த சங்கம் என்று நான் கருதுகிறேன். இன்று அதற்கும் தொண்டர்கள் தேவை; முக்கியமாகப் பெண் தொண்டர்கள் தேவை. நகரத்தில் வேலை செய்யும் ஹரிஜனங்களுக்கு நகர பரிபாலனத்தார் நல்ல வாசஸ்தலம் கட்டிக் கொடுக்கும் வரை, பெண்களாகிய நாம் நகர சபைகள் முன் விரதம் கிடக்கவேண்டும் என்றே சொல்வேன். மேலும், நாம் அவர்களுடைய குழந்தைகளைப் பிடித்துக் குளிப்பாட்டி, உடை யணிவித்து, பாடங் கற்பிக்கவும் முயலலாம். சரியான கல்வி யறிவு போதிப்பதே, மனசிலுள்ள அடிமை மனப்பான்மையை ஒழித்துத் துன்பங்களிலிருந்து விடுவிக்கும் ஒரு வழியாகும். ஹரிஜனப் பெண்களை நர்ஸுகளாகவும், மருத்துவச்சிகளாகவும், கூடுமானால் டாக்டர்களாகவும் உபாத்தியாயர்களாகவும் பயிற்சி யளிக்கச் செய்வதையே நான் விரும்புவேன். பிறகு வர்க்கத்தின் பேரால் ஏற்பட்ட பகைமை தானாகவே மறைந்து போகும்.

---

# தொழில்

தொழில் வட்டாரங்களிலும் சேவை செய்ய நமக்கு நிறைய இடமிருக்கிறது. தொழில் வளர்ச்சிமிகுந்த பெரிய நகரங்களில், தொழிலாளிகளுக்கு நிதானமான சம்பளம், அவர்கள் பிள்ளைகளுக்குக் கல்வி, வைத்திய வசதி முதலியவைகளெல்லாம் அளிக்கும்படி, தொழிற் சட்டங்களின் மூலம் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டிருக்கின்றன. எனினும், நாம் இன்னும் எவ்வளவோ சாதிக்க வேண்டியிருக்கிறது. ஆலைத்தொழில் முறையற்ற நமது நகரங்களில் பாதுகாப்பற்றிருக்கும் ஸ்திரீகளின் தொழில் - சக்திக்கு நமது பாதுகாப்புத் தேவை. உழைப்பின் அளவு ஓரளவேயாயினும், ஊதியம் பெண்களுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கிறது. வேலை நேரங்களில், அங்கு வேலை செய்யும் ஆண்களின் கேலிக்கும் ஆளாகிறார்கள். அவர்களுடைய வாசஸ்தலங்கள் ஹரிஜனங்களுடையன போலவே மோசமாயிருக்கின்றன; அவர்களுடைய குழந்தைகளுக்கும் சரியான கவனிப்பு இல்லை.

---

## எளிய வாழ்க்கை

**போ**தனையைவிடச் சாதனையே சிறந்தது. ஆதலின் மற்றவர்கள் எப்படி நடக்கவேண்டும் என்று நாம் விரும்புவதன் முன்னே நமது சொந்த வாழ்க்கையிலேயே சில மாறுதல்கள் செய்துகொள்ளவேண்டும். ஜனனம், மணம், மரணம் முதலிய திதிகளில் நம்மவர்கள் அநாவசிய மாகப் பொருளை நாசமாக்குகிறார்கள். இது விஷயமாக நான் ஆண்களைக் கேட்டபோது, தாங்கள் சொன்னால் பெண் மக்கள் கேட்பதில்லை யென்றும், தங்களைப் பொறுத்தவரையில் செலவைக் குறைக்கத்தான் விரும்பு கிறார்கள் என்றும் பதில் வந்தது. முட்டாள்தனமாக, என்றோ ஒரு விசேஷ நாளில் அநாவசியமாகச் செல வழித்த பழிக்காகப் பல ஏழைக் குடும்பங்கள் வருஷக் கணக்காக-ஏன்-தலைமுறை தலைமுறையாகக் கடன் பட்டுக் கிடப்பதும் நமக்குத் தெரிந்த விஷயம். வரதக்ஷிணைக் கொடுமை வேறு. இதையும் ஒழித்தாகவேண்டும். இது ரொம்பவும் கீழ்த்தரமான, ஏச்சுக்கிடமான பழக்கம். இவ்விஷயத்தில் நாமே நல்ல எடுத்துக்காட்டா யிருக்க வேண்டும். எனினும் உண்மையில் நம்மில் பலரால் கொண்டு செலுத்த முடியாது. வாழ்க்கையில் நிதான மின்றி வருந்தத்தக்க முறையில் தவறி யிருக்கிறோம். எளிய உடை, உணவு, வாழ்க்கை முதலியவற்றால் நமக்கு எல்லாவகையிலும் நன்மை விளைவதோடு நாம் யாருக் காக உழைக்க எண்ணுகிறோமோ, அவர்களோடு நல்ல தொடர்பு கொள்ளவும் உதவி கிடைக்கும்.

---

# பால்ய மணம், பலதார மணம், கோஷா முறை

சாரதாச் சட்டமிருந்தும், பால்ய மணம் இன்னும் நடந்து வருவது நாம் நன்கறிந்த விஷயம். ஜனங்களுக்கு மேன்மேலும் கல்வியறிவு ஊட்டினாலன்றி, இதற்கு விமோசனம் கிடையாது. சட்டமானது தீமைகளை ஓரளவுக்குத்தான் தடுக்க உதவும். ஆனால், சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் தம்மைப் பொறுத்தவரையில் தீமையை உணர்ந்தால்தான் அதை ஒழிப்பதற்கும் உதவமுடியும். நம்முடைய ஊக்கமும், பெற்றோர்களுக்கு அளிக்கப்படும் கடுமையான தண்டனையும் தான் இதற்கு ஓரளவு உதவ முடியும்.

இதேதான் பலதார மண விஷயத்திலும். பலதார மணம் தங்கள் அந்தஸ்தைக் குறைக்கிறது என்பதைப் பெண்மக்கள் தாமாக உணரா விடில், தாம் செய்வது தவறு என்று ஆண்மகனை உணரச் செய்துவிட முடியாது. ஏழை மனிதனுக்குச் சில சமயங்களில் இது ஒரு பொருளாதார அத்தியாவசியமாகிறது. ஒருத்தியை மணஞ் செய்து கொண்டு, வயலில் வேலை செய்ய வேறு இருவருக்குக் கூலி கொடுப்பதைவிட, மூன்று மனைவியிருப்பது அவனுக்குச் சல்லிசாய் விடுகிறது. இந்த விஷயத்திலும் பெண்களைக் கற்க வைத்துத் தன்னம்பிக்கையையும் ஊட்டி விட்டால், அவர்கள் தங்களைப் பிறர் சுரண்ட விடாமல் பார்த்துக்கொள்வார்கள். மனைவியின் மலட்டுத்தனத்தால், அவளுடைய சம்மதம் பெற்று, வாரிசுக்காகவும், பிள்ளைக்காகவும் மறு தாரம் கொள்ளும் வழக்கமும் கொடூரமானது. மாதர் சமூகத்தினர் ஒவ்வொருவரையும் நசுக்கும் வழக்கத்தையும், வள முறையையும் எதிர்க்க வேண்டுமெனில், கல்வியறிவு புகட்டுவதை விட வேறொன்றும் கிடையாது. இந்த அறியாமை எந்த விதத்திலும் பெண்களுக்கு மட்டும் உரியதல்ல. நம்முடைய ஆண்களும் அதிகம் படிக்காவிட்டாலும் ஓரளவுக்கேனும் கற்க வேண்டும். சமூகச்

சீர்திருத்தத்துக்கு மோசமான எதிரிகள் யாரெனில், அறியாமையில் ஆழ மூழ்கியவர்களும், கெடுதி எங்கு நேருகிறது என்பதை உணராதவர்களும், பெண்களின் மேல் தமக்குள்ள ஆதிக்கத்தை ஒழிக்க முயன்றால், மதத்தையும் ஐதிகத்தையும் வைத்துக் கொண்டு கூச்சலிடுபவர்களுமான ஆண்களேயாம். மேலும் நம் முடைய படித்த பெண்கள் சிலர் இரண்டாந்தாரத்திற்கு ஒப்புக்கொள்வதையும், படித்த தாய்மார்கள் ஏதேனும் ஒரு லாபத்தைக் கருதித் தம் பெண்களைக் கல்யாணமான புருஷர்களுக்கு மணஞ் செய்வதையும் பற்றி நான் என்ன சொல்வது? அவர்களை நான் வேண்டிக் கொள்வதென்ன வெனில், ஒரு சகோதரப் பெண்மணியைத் துன் புறுத்தும் தொழிலில் அவர்கள் போக வேண்டாம் என்பதேயாம். அம்மாதிரியான காரியங்கள் பெண்களின் மதிப்பையும் புனிதத்தையும் பங்கப்படுத்துவனவாகும்.

பர்தா வழக்கம் ஓர் அளவுக்குப் போய்விட்டது; காலக் கிரமத்தில் முற்றும் போய்விடும். ஆனால், அது இன்னும் சில பாகங்களிலும், சில ஜாதிகளிலும் கண்டிப்புள்ள தாகவே இருக்கிறது. மனுஷ்யனால் ஒரு கணம்கூட விட்டுக் கொடுக்கமுடியாத ஓர் உரிமையை, பெண்களின் சரீரம், அறிவு, புனிதத்தன்மை இவைகளைப் பாதிக்கும் ஒரு வழக்கத்தை, மதத்தின் பேரால் பெண்கள்மேல் சுமத்த உணர்வுள்ள எந்த ஆணும் பெண்ணும் சம்மதிக்க மாட்டார்கள். சமூகத்தில் பூர்ணமாகவும் சுதந்திரமாகவும் பெண்கள் பங்கெடுத்துக்கொண்டால்தான் மனித சமூகத் தை முன்னேற்றக்கூடிய எல்லாத் துறைகளிலும் சரி யான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முடியும். நான் மட்டும் சர்வாதிகாரத்தை நம்பினால், முதன்முதல் ஒழிக்க வேண்டிய பழக்கம் இந்தப் பர்தா முறையாகவே இருக்கும். அதனுடைய நீடிப்பை ஆதரிக்கும் ஆண்கள் நன்றாக யோசித்துப் பார்க்கட்டும்; அதன் ஆட்சியில் வாடும் ஒவ்வொரு பெண்ணும் அதை எதிர்த்துப் போராடட்டும்.

---

# பொதுவான சட்டம்

இந்தியப் பெண்களாகிய நாம், மணம், சொத்துரிமை, கார்டியன் உரிமை விவாகரத்து முதலியவை சம்பந்தமாகப் புதுச் சட்டங்கள் வகுக்கவேண்டும் என்பது எனது நெடுநாளைய அபிப்பிராயம். முதலில் இந்தச் சட்டத்தை எந்த மதத்தினராயினும், எவராயினும், அவர்களுடைய இஷ்டத்துக்கு விட்டுவிடவேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தச் சட்டம் நலன் விளைவிப்பதாயின் கல்வியறிவு பரவப் பரவ இதுவும் மிகவும் பிரபலமடைந்து, நாளடைவில் மற்றச் சட்ட திட்டங்களை மிஞ்சுவதாகவும் ஆகிவிடும் என்று நான் திட்டமாக நம்புகிறேன். சட்டத்தில் ஒரு சிறு மாறுதல் செய்தாலும் ஏற்படும் குழப்பமான எதிர்ப்புகளை இது நிறுத்திவிடும். "மதத்திற்கு ஆபத்து!" என்ற பலத்த கூக்குரலானது, குழந்தைகளைப் பூச்சாண்டி பயமுறுத்துவது போல, அறிவுள்ளவர்களைக்கூடப் பூச்சாண்டி காட்டுகிறது.

---

## சுதேசியம்

பெண்மக்கள் அதிகம் சாதிக்கக் கூடிய, சாதித்த, இயக்கம் இது. நாட்டுப்பற்று என்பது நாட்டின் மரபோடு ஒட்டி வாழ்வது, அதனால் பெருமை கொள்வது, பல உருவங்களில் விளங்கும் அந்நாட்டின் அழகையும் கலைகளையும் சிறப்பிப்பது, அந்நாட்டுக் கிராமத்திலும் நகரத்திலும் மாகாணத்திலும் விளையும் பொருள்களைப் பாதுகாப்பது முதலியவையேயாகும். இவை பெண்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. இந்தியாவிலே செய்த பொருள்கள் கிடைக்கும் போது, அன்னியச் சரக்குகளை வாங்குவதில்லை என்று நாம் சபதம் பண்ணிக் கொண்டால், சிரமமே இருக்காது. ஆலைப் பொருள்களைவிடக் கைத்தொழில் - பண்டங்களுக்கு விலை அதிகமாகவே இருக்கிறது. இப்படி எல்லா நாட்டிலும் இருக்கிறது. கதரைப்பற்றி முன்னால் குறிப்பிட்டிருக்கிறேன். அதன் உண்மையான பெருமையை மீண்டும் உணர்ந்து கொள்ளும்படி உங்களை வேண்டுகிறேன். கதர் உற்பத்திக்கென்று காந்திஜி வகுத்திருக்கும் புதிய திட்டத்தினால், நகரத்துப் பெண்கள் நூல் கொடுத்தே துணி பெற வேண்டியிருக்கிறது. கதரின் தத்துவத்தை நன்கு உணர்ந்து தினம் ஒரு மணி நேரம் நூற்பதே நமக்கு இன்பமும் ஏற்றமும் தரும் ஒரு பொழுது போக்காகும். நாம் நூற்கும் ஒவ்வொரு நூலும், அறுந்து போன நமது தேசிய வாழ்வின் தறியைச் சீர்ப்படுத்த உதவுகிறது என்பதை மட்டும் நாம் உணர முடியுமானால் நாம் ராட்டையை விரும்புவோம்; அதனுடைய கீதம் நம் இதயத்திற்குப் புத்துணர்வூட்டும். எல்லாவகையிலும் குடிசைத் தொழிலுக்கு நமது முழு ஆதரவும் இருக்க வேண்டும்; ஏனென்னில் அது நம்முடைய பெண்களுக்குப் பொருளாதார நிவாரணம் அளிக்கிறது. மேலை நாடுகள் யந்திர உற்பத்தியால் மிகப் பெரிய சங்கடத்துள் மாட்டிக் கொண்டதுபோல், நமது நாடும் சிக்கிக் கொள்ள வேண்டுமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யந்திரம் என்பது மனிதனுக்கா

கவே செய்யப்பட்ட தென்பதையும், அதனுடைய உதவி மனிதனது சுமையைக் குறைப்பதற்காக வேண்டுமே யன்றி, பெருந் தொழிற்சாலைகளில் நடைபெறுவதுபோல மனிதனை வெறும் சூத்திரப் பொம்மையாக்கிவிடு வதற்கில்லை என்பதையும் நாம் நம்பினால், குடிசைத் தொழில்களை முன்னேற்ற உதவுவதற்கு யாதொரு இடைஞ்சலும் இராது. இதை எழுதும்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் ஸ்ரீ நாராயண அகர்வால் எழுதிய 'காந்தீயத் திட்டம்' என்ற நூலைப்படித்தேன். என்னுடைய சகோதர உழைப்பாளிகளுக்கு அதைக் கவனமாய்ப் படிக்கும்படி நான் சிபாரிசு செய்கிறேன்.

[இதன் தமிழ்மொழி பெயர்ப்பு: தினமணி வெளியீடு விலை ரூ. **1-8-0.**]

---

## தாய்மொழி

அன்னிய ஆதிக்கத்தால் விளைந்த பல தீவினைகளில் ஒன்று, இன்று கல்விச் சாலைகளிலுள்ள போதனா முறை, ஆரம்ப வகுப்புக்களிலன்றி மற்ற வகுப்புக்களில் ஆங்கிலமே போதிக்கப்படுகிறது. மேல்படிப்புப் படித்த நம்மில் பலருக்கும், நமது பாஷைகளைப் பற்றிய உண்மையான அறிவு அற்றுப் போனதே அதன் விளைவு. நம்முடைய பாஷைகளில் நாம் வளம்பெற்றிருந்தாலன்றி நம்முடைய பெண்களுக்கு வேண்டிய நூல்களை ஆங்கில மூலம், மொழி பெயர்ப்பு முதலியவைகளின் மூலம் உண்டாக்க முடியாது; பொது மக்கட் சமூகத்தில் கலந்துகொள்ளவும் முடியாது. மேலும் இந்தியாவின் பொது மொழியைப்பற்றி ஒரு சிக்கலான பிரசினை இருக்கிறது. இந்தியாவிலுள்ள இரு பெரும் ஜாதியாரிடம் இன்று ஏற்பட்டுள்ள பிளவினால், ஹிந்துஸ்தானியைப்பற்றி ஒரு விவாதம் உண்டாகியிருக்கிறது. எனினும் நாமெல்லாம் ஹிந்தியையும் உருதுவையும் தேவநாகரி பாரசீக எழுத்துக்களில் கற்றுக்கொள்ள வேண்டும். இரண்டிலும் நல்ல முறையில் பாண்டித்யம் பெற்றவர்கள்தான், பொது மொழி வளர்ச்சிக்குப் பாரபக்ஷமற்ற முறையில் உதவ முடியும் என்று நான் நம்புகிறேன். ஆனால், இதைப்பற்றியெல்லாம் பொதுஜனங்கள அக்கறை கொள்வதில்லை. நம்முடைய முக்கிய நோக்கமே அவர்களை அணுகி அவர்களுக்கு நலம் விளைப்பதும், அவர்களுடைய சேவையால் தேசிய ஒற்றுமைக்கு உதவுவதுமேயாகும்.

நகர வீதிகளில் நாம் செல்லும்போது நம்மவர்கள் தாய்மொழியில் பேசாது ஓட்டை ஆங்கிலத்தில் பேசிக்கொள்வதும், ஹோட்டல்களில் சாப்பிடுகிறவர்களும் பரிசாரகர்களும் ஆங்கிலத்திலே வார்த்தை பரிமாறுவதும் வருந்தத்தக்கன. ஆங்கிலேயர்கள் தம்முடைய பழக்க வழக்கங்கள், ஆடையணிகள், பாஷை இவைகளின் உயர்வைப் புகுத்தியதின் விளைவால், நம்மவர்களும் அதை இறுகப் பற்றிக்கொண்டு, தங்கள்

சுயமதிப்பையும் தேசிய கௌரவத்தையும் இழந்து விட்டார்கள். இவ்விஷயத்தைத் தீர யோசித்துப் பார்த்தால், நம்முடைய ஜனங்களுக்குத் தங்கள் தேசிய உடையைப்பற்றிய கௌரவங்கூட இல்லை என்பது குறித்து வருந்தவேண்டியிருக்கிறது. பெண்களாகிய நாம் விளையாட்டுக்காகவேனும் ஐரோப்பிய உடை தரித்துக் கொண்டால்கூடப் பலமாக ஆக்ஷேபிக்கக் கூடிய ஆண்கள் இருப்பதையும் நான் அறிவேன். ஆனால் அவர்கள் மட்டும் ஏன் அப்படி அணிந்து கொள்ளவேண்டும்? சர்க்கார்க் காரியாலயங் களில் பல இளைஞர்கள் இறுக்கமான ஐரோப்பிய உடைகள் அணிந்து, ஓட்டை ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்கப் பரிதாபமாயிருக்கிறது. பெண்குலத்தாராகிய நாம் அவர்களை நல்வழிப்படுத்த நம் முழுச் சக்தியையும் உபயோகிக்க வேண்டும். நமது தேசிய வாழ்விற்கு காந்திஜி தந்துள்ள முக்கியமான செல்வம் நம் பண்டை நாகரிகத்தின் பெருமையிலும், நமது தேசிய உடையிலும் பாஷைகளிலும், பற்று உண்டாக்கி நம்மை வளர்த்து விட்டதேயாகும். நாம் பரிபூர்ணமாய் வளர்ச்சி பெறுவ தற்கு, நம் எல்லோருடைய ஊக்கமும் தேவையா யிருக் கிறது. ஆங்கிலேயர்களிடம் கட்டுப்பாடு, குறித்த காலம் தவறாமை, சுகாதாரம், ஒத்துழைப்பு, தேசியத் தேவை யில் தனிப்பட்ட வேற்றுமையைத் தவிர்ப்பது, தேச பக்தி, கலை மொழி நாடு இலக்கியம் முதலியவற் றினால் உண்டாகும் பெருமிதம் முதலியவை இருக் கின்றன. இவைகளை நாம் நன்றாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், கலாசாரநாகரிகச் செல்வங்கள் நிறைந்த ஒரு யுவ பாரதத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமெனில், நம் வாழ்க்கைக்கு வேண்டாதவற்றையும், நமக்குக் கெடுதல் விளைப்பன வற்றையும் குருட்டுத்தனமாய்க் 'காப்பி'யடிப்பதையும், மண்ணோடு மண்ணாய்ப் போக்கவேண்டும்.

## குடித்தல், புகைபிடித்தல், சூதாடல்

குடிக்கு இரையானவனை விட, அவன் வீட்டுப் பெண்களுக்குத்தான் குடி அதிகத் துன்பம் விளைவிக்கிறது. தொழிலாளர் சமூகத்தில் வண்ணார், ஹரிஜனம் போன்ற ஜாதிகளிலும் சீக்கிய ஜாதியிலும், குடி பெருங் கேடு விளைவித்திருக்கிறது, விளைவிக்கிறது. தொழில் செய்யும் வட்டாரங்களில், மதுவற்ற பானங்கள் கிடைக்கும் கடைகளைத் திறப்பதாலும், குடிக்கும் நேரத்தைப் பேச்சினாலும் தேக சுகந்தரும் பொழுது போக்குகளாலும் மறக்கச் செய்வதாலும், நாம் குடிக்குப் பலியாகிறவர்களைக் காப்பாற்ற உதவலாம். மாதர் சங்கங்கள் இம் முறையில் உழைக்கின்றன. தேத்தண்ணீர் கொடுப்பதின் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட வண்ணாரிடம் நான் வெற்றி கண்டிருக்கிறேன். தங்கள் சமூகத்திலுள்ள குடிப் பழக்கத்தை எதிர்த்துச் சமீபத்தில் சீக்கியத் தலைவர்கள் பேசியிருப்பது மகிழ்ச்சி தருகிறது. சீர்திருத்த நோக்கம்கொண்ட இந்த முயற்சி சீக்கிய கிராமங்களிலும் சீக்கிரமே பரவும் என்று நாம் நம்பலாம்.

அறிவுக்கும் உடம்புக்கும் அது விளைவிக்கும் தீய பலனைப் பற்றிக் குடிப்பவர்களிடம் பிரசாரம் செய்துவந்தால் இந்தச் சீர்திருத்தத்தைக் கைதூக்கி விடுவதாகும். புகை பிடித்தலும் பெருங் கேடு விளைவிக்கிறது. சிம்லாவில் ரிக்ஷாக்காரர்களையும், சுமை கூலிகளையும், சிறுவர்களையும் கூடப் புகை பிடித்தலை விட்டுவிடும்படி கூறி, அதற்காக நான் எத்தனையோ தடவை பாடுபட்டிருக்கிறேன். தொழிலாளியின் கூலி உயர்வுக்குத் தக்கபடியே அவர்கள் குடி, சூது, புகை முதலியவைகளில் அதிகம் செலவிடுகின்றனர் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். இன்று சிகரெட்டுக்கள் கிராமங்களிலும் நுழைந்துவிட்டன; ஓரளவு கெடுதி செய்யும் ஹுக்காவின் இடத்தையும் ஆக்ரமித்துவிட்டன. சூதாட்டத்தின் தீமையும் வளர்ந்தே வருகிறது. இந்தத் தீமைகளை ஒதுக்க, நாமே ஒரு முன்வழி காட்டவேண்டும்.

மற்ற விஷயங்களைப் போல், குடியிலும் நம்மில் செய லுள்ள பலர் ஐரோப்பியப் பழக்க வழக்கத்தைப் பின் பற்றுவதும், நம் இளைஞர்கள் பலர்—முக்கியமாக இன்று ராணுவத்தில் உள்ள உத்தியோகஸ்தர்கள்—அதை அதிகம் கையாளுவதும் நமக்குத் தெரியும். நமக்குக் கேடு விளைக்கும் மேலைநாட்டுச் சமூகச் சம்பிரதாயங்களைத் திட மாக மறுக்கும் மனோபலம் நமக்கு வேண்டும். விருந்தின ருக்கு மதுவளிப்பதை எதிர்ப்பது என்றால் உத்தியோ கஸ்தர்களின் மனைவிமார்களுக்குச் சிரமமானதுதான் என் பதும் எனக்குத் தெரியும். ஆனால், அப்படிச் செய்யவேண் டியது அவர்கள் கடமை. இவ்விஷயங்களில் கூட்டு ஒத்து ழைப்பு பேருதவி அளிக்கமுடியும். ஒன்றுக்கு மேற்பட்ட இளம் உத்தியோகஸ்தர்கள் மதுவருந்த மறுத்ததையும், அதனால் செல்வாக்குக் குறைவதற்குப் பதிலாகச் சகோதர உத்தியோகஸ்தர்களிடம் பெருமதிப்புப் பெற்ற தையும் நான் அறிவேன். ஒருவரால் முடிந்தால், அனைவராலும் முடியும்.

## விபசாரம்

சமீபகாலச் சட்டங்கள் இருந்தும், இத்தீமை இன்னும் இருக்கவே செய்கிறது. யுத்தமும் இதைக் கைதூக்கி விட்டுவிட்டது. இங்கும் ஒழுக்க முறைமையைப் பற்றிய ஒரு பிரசினை இருக்கிறது. இந்த அபலைச் சகோதரிகளின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொருளாதார நிலையை உண்டாக்கி விடலாம்; ஆயினும் அந்தத் தீமையினின்றும் அவர்களாகவே மனத்தைத் திருப்பினாலன்றி நாம் இந்தத் தீமையை ஒழித்துவிட முடியாது. இம்மாதிரிப் பெண்களைப் பார்ப்பதும், பேசுவதும் கௌரவக் குறைச்சல் என்றும் அறிவீனம் என்றும் கருதப்பட்டு வருகிறது.

விபசாரியுடன் ஒரு பெண்ணைப் பார்த்துவிட்டாலும் அவளுக்கும் அப்பட்டத்தைச் சூட்டிவிடுகிறார்கள். இந்தத் தடையை நாமே உடைக்க முடியும், உடைக்க வேண்டும். சமூகத்தில் அவர்களுக்குச் சரியான வரவேற்பு அளிக்கப் படும் என்ற நம்பிக்கையை உண்டாக்கினால் அவர்களை அந்த வழியினின்றும் திருப்ப முடியும் என்று நான் நிச்சயிக்கிறேன். அவர்களுடைய புத்திரிகளையும் அதே தொழிலில் ஈடுபடுத்தாதவாறும் செய்ய முடியும். அப்படி மூன்று பெண்களைக் காப்பாற்றித் திருமணமும் செய்வித்திருக்கிறேன்; அதற்காக நான் பெருமைப்படுகிறேன். பின் ஏன் ஆயிரக் கணக்கானவர்களை மாற்றக்கூடாது?

பெண்களுக்கு ஒரு சட்டம், ஆண்களுக்கு ஒரு சட்டம் என்ற நியதி ரொம்ப காலமாய் அமலில் இருந்துவந்திருக்கிறது. பெண்களவ்வளவு ஆண்களும் குற்றமுள்ளவரேயாயினும், சமூகம் அவர்களை ஒதுக்கிவிடவில்லை. சமூகத்தின் ஒதுக்கப்பட்ட சகோதரிகளின் நலத்திற்காக உழைக்க, இன்று நமக்கு ஆயிரமாயிரம் பிளாரன்ஸ் நைட்டிங்கேல்களும், ஜோசபைன் பட்லர்களும் வேண்டும்.

## சமூக ஒற்றுமை

இந்த ஒற்றுமையின்மை நமது தேசீய வாழ்வின் வித்துக்களைப் பூச்சிபோல் தின்று வருகிறது. மனிதனுக்குள் பகைமையையும் நம்பிக்கையின்மையையும் போதிப்பவர்கள், மனுஷ்யத் தன்மைக்கே பெருங்கேடு சூழ்கிறார்கள். எல்லா மதங்களுமே, 'சகோதர மக்களிடம் அன்புகொள்' என்று போதிக்கின்றன. மதத்தை அவமதித்த மனுஷ்யனுடைய செயல்தான், நம் நாட்டில் மட்டுமல்ல—உலகம் முழுவதையுமே இன்றைய சீர்கேடான நிலைமைக்கு இழுத்துக்கொண்டு போய் விட்டது. நம்மிலும் அவ்விஷம் பரவி வருகிறது என்ற உண்மையை நாம் உணராமலிருக்கலாம். நம்மிடமுள்ள ஸ்திரீ-தத்துவத்தின் உயர்வை நாம் உணர்ந்துவிட்டால் நம்முடைய ஆத்மார்த்த தார்மிக வளர்ச்சிகளைக் குலைப்பனவற்றையும், மதத்தின் பேரால் நடக்கும் திண்டுமிண்டுகளையும் திருகுதாளங்களையும் எதிர்த்து, நம் நல்லுணர்ச்சிகள் போராடும்.

இன்றைக்கிருக்கும் நிலையில் விவரித்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. பத்திரிகையிலும் மேடையிலும் இவ்விஷயத்தைப் பற்றி வாயளக்காமலிருப்பதே நல்லது என்று நான் அடிக்கடி உணர்கிறேன். சமூக சேவையில் நாம் செய்யக்கூடிய, செய்யவேண்டிய, எத்தனையோ பொதுக் காரியங்கள் இருக்கின்றன. பெண்களாகிய நம் முயற்சியினால், கிராமசத்தில் நமக்கும் நம் குழந்தைகளுக்கும் உடைக்க முடியாத ஒரு பாந்தவ்யத்தை ஏற்படுத்துவதன் மூலம்,—நம் நாட்டில் மட்டுமல்ல—பரந்த உலக சமுதாயத்திலேயே ஜாதிமதத் தடைகளை மீறி எதையும் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன்.

---

## II

# கிராம ஊழியர்களுக்கு

நம்முடைய சங்கங்கள் நுழையாத துறை இது. எனினும், இந்தியா கிராமங்களாலான ஒரு நாடு. இந்தியா வாழ வேண்டுமானல், கலாசாரம், பொருளாதாரம், ஆத்மீகம் முதலிய எல்லா வகையிலும் கிராம வாழ்க்கையைப் புனருத்தாரணம் செய்தாகவேண்டும். நம்முடைய சங்கத்தின் கிளை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிராமத்தில் சேவை அனுஷ்டித்தால், நமது தேசீய அமைப்புக்கு ஒரு விசேஷ நலம் விளைவித்ததாகும் என்று பல வருஷங்களுக்கு முன்னுலேயே சொல்லியிருக்கிறேன். அதையே மீண்டும் சொல்கிறேன். நாம் கிராமங்களில் சென்று அங்கேயே வசிக்கவேண்டும். இல்லையெனில், பழங் குடிப்பெண்களும் பட்டணத்துப் பெண்களும் கிராம வாழ்க்கைக்குத் தம்மைச் சுதாரித்துக் கொள்ள முடியாது; கிராமத்தில் வசித்தால்தான் உண்மையான சேவை செய்ய முடியும். மாதர் சங்கக் கமிட்டிகள் வகுத்த திட்டத்தை நிறைவேற்றச் சம்பளம் பெறும் ஊழியர்களைக் கிராமங்களில் நியமித்து, மாதர் கிளைச் சங்கத்தார் அங்குச் சென்று அவர்கள் சேவையைக் கண்காணிக்க முடியும்.

கிராம சேவைக்காக, வாழ்வைத் தத்தம் செய்ய வேண்டும் என்பதை இளைஞர்களுக்குப் போதிக்க வேண்டும். சந்தேக மின்றி, இம்மாதிரி வேலைகளில் ஈடுபட்ட பெண்கள் சங்கடத்துக்கும் உள்ளாக வேண்டியிருக்கும். கிராமத்தாரோடு தாமும் ஒருவராய் வாழ முன்வரும் இளந் தம்பதிகள்தான் இந்த வேலைக்கு ரொம்பப் பொருத்தமானவர்கள் என்று நான் உணர்கிறேன். ஆனலும், சங்கடங்களைச் சமாளிக்க வேண்டும். துணிந்தவருக்குத் துக்கமில்லை—இது இன்று உண்மையாய்விட்டது.

நம் கிராமங்கள் பார்வைக்குக் கவர்ச்சிகரமாயில்லை. வறுமை ஒரு புறமிருக்க, அவர்களிடமுள்ள மனுஷ்யத்வம் ஆழ்ந்த அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறது. அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை; எதையும் ரஸிக்கும் உணர்ச்சிகூட அவர்களிடம் மக்கிப் போய்விட்டது. ஒப்புக்குத்தான் வாழ்ந்து வருகிறார்கள். எனினும் சாகுபடியாகாத நிலத்தில்தான் மற்றவைகளைவிட அதிக பலன் கிடைக்கும். ஆதலின் நம்மிடம் ஊக்கமும், நம்பிக்கையும் சக்தியும் போதுமான ஊழியர்களுமிருந்தால், கிராமத்துச் சந்துகளிலும் வீடுகளிலுமுள்ள குப்பை கூளங்களை நீக்கி விடலாம். நோயையும் விரட்டியடித்து நாம் எதிர்பார்க்கும் காலத்திற்குள்ளாகவே கிராமத்தாரை அறிவு பெறவும் செய்ய முடியும். ஆனால் இது சிரமமான வேலை. இதற்கு உண்மையான ஆர்வமும் ஊக்கமும் கொண்ட தொண்டு தேவையானது. எத்தனை கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், இந்த வேலையை ஏற்றேயாகவேண்டும்.

இந்த விஷயத்திலும், பெண்டு பிள்ளைகளுக்குத் தேவையான சாதாரணச் சமூக சுகாதார விதிகளைப் போதிப்பதோடு, அவர்களுக்குக் கல்வியும் போதித்து அறிவை விருத்தி செய்யவேண்டும். அவர்களுடைய கிராமத்தைச் சுத்தம் செய்வதோடு, கூட்டுறவினால் விளையும் பல நன்மைகளைக் குறித்தும் போதிக்கவேண்டும். கிராமம் எல்லாருக்கும் பொது. ஆதலால் சுகாதார வசதிக்காகக் கக்கூஸ்கள் கட்ட வேண்டியிருந்தால் அதில் எல்லாரும் சேர வேண்டும். குழிகள் தோண்ட, ரோடு போட, வழி வகுக்க வேண்டுமெனில், அதற்கு ஒன்றுபட்ட உழைப்பு வேண்டும். பள்ளிக்கூடமிருந்தால், எல்லாக் குழந்தைகளும் அங்குச் செல்ல வேண்டும். குடிசைத் தொழிலைப் புத்துயிர் பெறச் செய்தால், அதன் உற்பத்திப் பொருள் அந்தக் கிராமம் முழுமைக்கும் பயன் படவேண்டும்.

தங்களுக்கு வேண்டிய உணவு, உடைகள் போக மீந்திருப்பதைத்தான் அவர்கள் வெளியிலே அனுப்ப வேண்டும். பஞ்சாயத்து முறையை உண்டாக்கினல் (உண்டாக்க வேண்டுமென்பது என் எண்ணம்) ஆண்களைப் போல் பெண்களும் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். தங்களால் அந்தக் கிராமத்தார்கள் பெருமையடையும்படிச் செய்ய வேண்டும். தங்கள் சுற்று வட்டாரங்களையும் தங்களையும் சிறப்பித்துக் கொள்ளும் படியாக ஊழியர்களோடு ஒத்துழைத்துக் கிராமங்களுக்குள்ளே அவ்வப்போது பரிசுப் போட்டி நடத்தலாம்.

பொதுத் தேவையைக் கூட்டுறவின் மூலம் நிறை வேற்றிக் கொள்வது என்பதே நமது கொள்கையாயிருக்க வேண்டும். அதன் மூலம் கிராமத்தின் ஊதாரிச் செலவுகளை நிறுத்தி, அதைத் தன் சுய பலத்தில் நிற்க வைக்க முடியும். நம்முடைய நாட்டின் நிர்வாகத்தில் அடிப்படைத் தொகுதிகளாகப்போகும் கிராமங்களில் கூட்டுறவைப் பற்றிப் போதித்தும், செயலில் சாதித்தும் வந்தால், இன்றைக்குப் பட்டணத்து மக்களுக்கும் கிராமத்தார்களுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமைகள் திட்டமாய் மறைந்து போய் விடும் என்பது என் நம்பிக்கை. நம்முடைய ஊழியர்கள் தம் வீட்டையும், அதன் வட்டாரத்தையும் வெகு சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். கையினல் குத்திய அல்லது செக்கில் குத்திய கோதுமை ரொட்டியையும், கைக்குத்தரிசியையும், கிராமத்தில் வளரக்கூடிய காய்கறி பழவர்க்கங்களையும் உணவாகக் கொள்ளவேண்டும். பகல் நேரத்தில் உடலை வேலையில் ஈடுபடுத்த வேண்டும்.

சுருங்கச் சொன்னல் அவர்கள் என்ன போதிக்கிறார்களோ அதையே தம் கிரியாம்சையால் சாதிக்கவேண்டும். ஊழியர்கள் முன்மாதிரியாக இருந்தால் நாளடைவில் எந்த அறிவீனனும் அவர்களைப் பின்பற்றாமலிருக்க மாட்டான். சுத்த ஜல விநியோகம், சுகாதாரம், நோய்நொடி, கல்வியின்மை, அறியாமை, தீண்டாமை, பால்ய விவாகம்,

விதவா விவாகம் முதலியவை பற்றிய பிரசினைகள் பட்டணத்திலிருப்பது போலவே கிராமங்களிலும் இருக்கின்றன.

சில இடங்களில் குடி, சூது, புகை பிடித்தல் முதலிய தீமைகளையும் ஒழிக்கவேண்டியிருக்கும். இந்தச் சீர்திருத்தங்கள் ஒரு புறமிருக்க, கிராமத்தாரின் ஒழிவு நேரங்களைப் பயன் படச் செய்ய வேண்டும். மேலும், அவர்களுக்கு பொருளாதார நிவாரணமளிக்கும் கைத்தொழில்களின் புனருத்தாரணத்தைப் பற்றிய பிரசினையையும் கவனித்தல் வேண்டும். நூற்றலும் நெய்தலும் அவர்கள் உரிமையைக் காப்பாற்றியிருக்கின்றன. அந்தந்த இடத்துக் கைத்தொழில்களை உத்தாரணம் செய்வது ஊழியர்கள் வேலை. குழந்தைகளுக்கு கல்வி புகட்டவேண்டிய பெருந் தேவையும் நம்முன் இருக்கிறது. எந்தத் தொழில் செய்தாலும், அடிப்படைக் கல்வியும் கற்றேயாக வேண்டும்.

சேவை செய்யவேண்டும் என்று ஊக்கம் படைத்தவர்கள் ஸ்ரீமதி ஆஷா தேவியுடன் தொடர்பு கொண்டு அடிப்படைக் கல்வி முறையில் பயிற்சி பெற வேண்டும். மாணவர்கள் தங்கள் ஒழிவு நேரத்தில் சில மணி நேரத்தையும், லீவு நாட்களின் பெரும்பகுதியையும் பக்கத்துக் கிராமத்தாருக்கு உதவும் சேவையில் அர்ப்பணிக்கலாம்.

தம்பதிகளாயிருப்பவர்கள் அதிகம் உழைக்க முடியும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆனால், ஒரு சகோதர சகோதரியும், அல்லது இரு சகோதரிகளும், இரு நண்பர்களும் அதேபோல உழைக்கமுடியாது என்பதில்லை. தனிப்பெண்ணாக ஒருத்திபோய்க் கிராமத்தில் குடியேறுவது சிரமமானது. இடையூறுகள் ஒருபுறமிருக்க, கல்வியறிவுள்ளவர் கூட்டுறவின்மையால் கொஞ்ச காலத்தில் மனசிலே சலிப்பு தட்டி விடுகிறது. வேலையோ மிக அதிகம்; இருவராலும் முடிப்பது சிரமம். ஆனால் வாழ்க்கையே துணிச்சல்தான்; துணிந்தவர்களே சரித்

திரப்பிரசித்தி பெற்றார்கள். இந்தப் பரந்த நாட்டின் வாழ்வும் வீழ்வும் யார் கையிலிருக்கிறதோ, அவர்களிடம் தைரியத்தை எதிர்பார்க்க வேண்டியதுதான்.

இந்தப் புஸ்தகம் எழுதியதிலிருந்து, மாதர் சங்கம் குழந்தைகள் பாதுகாப்புக்கும் அநாதை விடுதிக்கும், பஞ்ச, நிவாரணத்துக்கும் நிதிபிரிக்க ஆரம்பித்துவிட்டது.

அந்த நிதியைக் கொண்டு குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி முறையில் பாடம் கற்பிக்கப்படும். இதனால், தாங்கள்கற்ற கல்வியையும், பயிற்சியையும் கொண்டு கிராமங்களைப் பன்மடங்கு முன்னேற்றக்கூடிய பலமும் ஆரோக்கியமுமுள்ள ஆண்களும் பெண்களும் கிடைப், பார்கள் என்று நம்பலாம்.

கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதியும் வந்துவிட்டது. அதனுடைய குறிக்கோள் — விஷயத்தையும் கொள்கைகளையும் காந்திஜி தெளிவாக்கிவிட்டார். கிராமங்களில் பெண்களுக்குச் சேவை செய்ய அந்நிதி பெரிதும் பயன் படும். பொருளாதாரம், தார்மிகம், அறிவு வளர்ச்சி முதலிய துறைகளில் நமது சகோதரிகளை முன்னேற்ற உதவும் ஒரு நிதிக்குப், பெண்களாகிய நாம் முழுப் பொறுப்பாளர்களாக இல்லாமற்போனது வருந்தத் தக்கது.

அந்த நிதியை நம் கையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற குறுகிய மனப்பான்மையில் சொல்லவில்லை ஆனால் ஆண்டவனின் ஆணைப்படி நாம் நமது முழுச் சக்திகளையும் கிராம சேவைக் கென்று அர்ப்பணம் செய்வதை அறிந்து அவற்றைப் பூர்ணமாக நிறைவேற்றும் பொறுப்பாளரைத்தான் குறிக்கிறேன். அகில இந்திய மாதர் சங்கம் மட்டும் இந்த வேலையை ஏற்றுக்கொள்ள முடிந்திருக்குமேயானால், காந்திஜி இப்பொறுப்பை நம்மிடமே விட்டிருப்பார் என்று எனக்குத் தெரியும் இந்திய நாட்டில் நன்றாக வேரூன்றிவிட்ட ஒரு ஸ்தாபன

மாக நாம் நம் சங்கத்தைக் காட்டிக்கொள்ளவில்லை. இந்தியப் பெண்களின் நலத்துக்காக அவர்கள் சார்பில் உழைக்கும் ஒரு ஸ்தாபனமாக் கருதவேண்டுமென்றால், நாம் நமது கிரியைகளைப் பற்றிய எண்ணங்களை விஸ்தாரம் செய்யவேண்டும்.

---

## III

# உத்தியோகமும் பொதுவாழ்வும்

ஒவ்வொரு பெண்ணும் ஒரு தொழிலுக்குரிய கல்வி பெற வேண்டும் என்று நான் வேறோரிடத்தில் சொல்லியிருக்கிறேன். தன் ஜீவனோபாயத்திற்கு வேண்டியிருந்தாலும் இல்லாவிட்டாலும், இது தவிர்க்க முடியாதது. தன் இச்சைப்படி எந்தத் துறையைச் சார்ந்திருந்தாலும், ஒவ்வொருவருக்கும் பரிபூர்ண வளர்ச்சி பெற்றுக் கொள்வதற்கு உரிமையிருக்கிறது. 'உழைத்துக் கற்றுக்கொள்' என்பதுதான் இன்றைய கல்வியாளர்களின் கொள்கை. 'உழைத்து வாழ்ந்துகொள்' என்பது ஒவ்வொரு மனிதனுடைய கொள்கையாகவும் இருக்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் தொழிலோடு ஒட்டிக்கொள்ள வேண்டும். உழைப்பினால் பயன்பெறாவிட்டால், அது உதவாக்கரை வாழ்க்கைதான்.

டாக்டர்கள், நர்ஸுகள், மருத்துவச்சிகள், ஆசிரியர்கள், கலைஞர்கள், கைத்தொழில் நிபுணர்கள் முதலியவர்களுக்கு இன்று தேவை அதிகம். இந்தியாவிலுள்ள எல்லா மாணவிகளும் இன்று இந்த வேலைகளில் புகுந்துகொண்டாலும், அது நமக்குள்ள தேவைக் கடலில் ஒரு துளியாகத்தான் இருக்கும். ஒரு நாட்டின் நல்வாழ்வு அதன் கல்வியறிவையும் ஆரோக்கியத்தையும் பொறுத்ததாயிருப்பதால், இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வது மிகவும் முக்கியமானது. இந்த வேலைகளைப் பொறுத்தவரையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் போட்டி ஏற்பட வழியில்லை.

புத்திசாலித்தனத்துடன் நாம் திட்டம் வகுத்துப் பெரிய யந்திர சாதனங்களுக்கு அடிமையாக மறுத்துவிட்டால், மேலை நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரசினைகளும், யுத்தம் முடிந்தபின் ஏற்படப் போகும் வேலையில்லாத் திண்டாட்டங்களும் இங்கு ஏற்படப் பிரமேயமில்லை.

பத்திரிகைத் தொழில், பால் பண்ணை, கோழிப பண்ணை, விவசாயம், தோட்டத் தொழில், சித்திர வேலை முதலிய மற்றத் தொழில்களிலும் பெண்மக்கள் தம் பங்கைச் செலுத்துவதை நான் பார்க்க விரும்புகிறேன். ஆனால், தற்போதைய நிலையில் சமூக சேவை மற்றவைகளைக் காட்டிலும் முக்கியமென்றும், அதனால் இவர்கள் சேவையைப் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் பயன் படுத்த வேண்டுமென்றும் நான் உணர்கிறேன்.

நகர சபை ஸ்தல ஸ்தாபனங்களிலே பெண்களுக்குச் சேவை செய்ய நிறைய இடமிருக்கிறது. இந்த ஸ்தாபனங்களில் தேவையாயிருக்கும் சமூகப் பொறுப்புத் தன்மையையும் கடமையையும் இவர்கள் சபை அங்கத்தினர்களுக்கு உணர்த்த முடியும். ஸ்தல ஸ்தாபனங்களில் உழைக்கும் பெண்கள் தனி நபர்களின் பகைமையிலிருந்தும், ஜாதிப் பூசல்களிலிருந்தும் விலகி நின்றிருப்பதையும் நான் அறிவேன். ஆதலால் அவர்கள் மேலும் மேலும் இம்மாதிரி வேலைகளில் பங்கெடுப்பதை விரும்புவேன். அரசியலில் பங்கெடுப்பதைவிட இவைகளில் பங்கெடுப்பது இப்போதைய நிலையில் பயனுள்ளதாயிருக்கும்.

சுதந்திரத்துக்காகப் போராடும் அரசியல் போராட்டத்திலும் இவர்களுக்கு இடமுண்டு. பாரபக்ஷமற்ற சரித்திர முறையில் தேசீய காங்கிரஸின் தியாகத்தையும் தைரியத்தையும் பொன்னெழுத்தில் பொறிக்கும் போது, பெண்களில் பலர் பெயர்களும் கௌரவிக்கப் படும். பொது நலத்துக்காக வகுப்பு வாதத்தையும் கட்சி பேதத்தையும் ஒதுக்கி அரசியல் நிலையை உயர்த்துபவர் அநேகமாகப் பெண் மக்களே யாவர்.

அரசியல்துறை ஏன் அருவருப்புள்ளதாயிருக்க வேண்டும்? காந்திஜி தர்மத்தையும் அரசியலையும் குழப்பியதால்தான் அரசியல் உலகில்

அவருக்குத் தோல்வி ஏற்பட்டது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவரைப் பற்றிப் பாரபக்ஷமற்ற முடிவு வழங்கப்படுமேயானால், அரசியலில் சத்தியத்தை வற்புறுத்தி மனித வர்க்கத்துக்குச் செய்த பெரும் பயன்களுக்குத் தலைவராக அவரே கருதப்படுவாரென்பது நிச்சயம். வாழ்க்கையின் ஆத்மீகப் பெருமையின் மீதுள்ள அணையாத நம்பிக்கையினால் இன்று அவர் ஒருவரே அந்தகாரத்தில் மூழ்கிய இவ்வுலகிலே கை விளக்கேந்தி நிற்கிறார். இந்தியப் பெண்கள் அவருக்கு உண்மையாய் இருப்பார்கள் என்று நம்புகிறேன். ஏனெனில், அவர்தான் வாழ்க்கைப் பாதையைக் காட்டி எங்கள் நிலையை உயர்த்தி, எங்களிடமுள்ள மகா சக்தியை உணரச் செய்து ஆண்களை விட நாங்கள் அதிகம் சாதிக்க முடியும் என்பதையும் உணர்த்தினார்.

நாம் ஆழ்ந்து படிப்பதில்லை என்று அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். மேலோட்டத்தில் இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. நாம் பொது வாழ்வில் பெரும் பங்கு எடுக்க ஆரம்பித்து விட்டால், அன்றாடப் பிரசினைகளைப் பற்றி நுணுக்கமாகவும் கவனமாகவும் அறிந்துகொள்ள வேண்டும். விஷயங்களும் புள்ளி விவரங்களும் மனப்பாடமாய்த் தயாராயிருக்க வேண்டும். பேத உணர்ச்சிகளையும் குறைபாடுகளையும் போக்கும் வகையும் வழிகளும், சீர் திருத்தத் திட்டங்களும், வாதங்களில் நாம் தோல்வியுறாத முறையில் கவனத்தோடு வகுக்கப்பட வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் சுதந்திர இந்தியாவின் சர்க்கார் நடத்தும் சமூக சேவை ஸ்தாபனங்களிலே பெண்கள் தம் முழுப் பங்கையும் செலுத்துவதை நான் பார்க்க ஆசைப்படுகிறேன். இப்பொழுது கூட, நமக்குச் சமூக சேவை செய்யப் பயிற்சியளிக்கும் ஸ்தாபனங்கள் இல்லாதது வருந்தத் தக்கது. பயிற்சி-முகாம் நல்ல பயிற்சியளித்தாலும், நமக்கு ஒழுங்கான முறையில் பயிற்சியளிக்கும் நிரந்தர நிலயங்கள் தேவை.

பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டியவற்றில் பால் பண்ணை, கோழி வளர்த்தல், விவசாயம், தோட்ட வேலை, சித்திர வேலை முதலிய தொழில்களை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். பண்டைட் வழமுறைப்படி, நாம் பசு பரிபாலனத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாமும் நம் குழந்தைகளும் க்ஷேமமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதின் அறிகுறியல்லவா பசுவின் க்ஷேமம்?

நாம் கிராம சேவை செய்வதனுல், விவசாய அறிவை ஆண்களுக்கு மட்டும் ஏன் விட்டுவைக்க வேண்டும்? நமக்கு வேண்டிய சரியான உணவு வர்க்கமான பழங்களையும் காய் கறிகளையும் விருத்தி செய்வதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைக்குள்ள நம் நாடு குடிசைகள் நிறைந்தது. தேசீய சர்க்கார் செய்யவேண்டிய முதல் வேலைகளில் ஒன்று, ஒவ்வொரு குடும்பத்துக்கும் சரியான குடியிருப்பு வசதி செய்து கொடுக்கவேண்டியது. நம்முடைய தேவைக்குகந்த முறையில் அழகாக வேலைத் திறத்துடன் வீடுகள் கட்டப் பெண் - கலைஞர்களுக்குச் சந்தர்ப்பமும் சௌகரியமும் உண்டு. சுருக்கமாக, உழைக்க வேண்டுமென்ற விருப்பமும், அதற்கான அறிவைப் பெற முயற்சியு மிருந்தால், தேசீய வாழ்வில் நாம் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை.

---

# IV

## சமஸ்தானங்கள்

சமஸ்தானத்திலே பிறந்தவள் நான். என்னுடைய பால்யப் பருவத்தை ராஜபோகத்தின் ஆடம்பரத்திலும் செல்வத்திலும் கழித்தவள். அதனால்தான் சமஸ்தானங்களின் நலனை ஆழ்ந்து கவனிக்கிறேன். ஆனால் இந்திய மன்னர்கள் இழிவான நிலையிலிருப்பதும், பிரிட்டிஷ் இந்தியாவை விட 'இந்தியன் இந்தியா' என்று சொல்லப்படுவது பலவகைகளிலும் கீழ்த்தரமாக இருப்பதும் வருந்தத் தக்கன.

உபயோகமற்ற ஆடம்பரத்திலும் வைபவத்திலும் சமஸ்தானங்கள் அழுத்தமாக இருப்பதுடன், பிரிட்டிஷ் இந்திய அரசியல் முறையின் பேர்லியமைப்பைக் கொண்டதாகவும் இருக்கின்றன. அரசாள்வதற்குரிய அறிவோ, பயிற்சியோ இளவரசர்களுக்கு அளிக்கப்படவில்லை. இக்காரணங்களால் தேசீய இந்தியாவின் மனசில், குடியரசு நடத்தும் நமது எதிர்கால அரசியலில் சமஸ்தான அதிபதிகளுக்கு இடமில்லை என்று கருத இடந்தருகிறது.

குடியரசு என்று நான் யோசித்தே சொல்லுகிறேன். ஏனெனில், இந்தியா சுதந்திரமடையும்போது ஒரு குடியரசு நாட்டைத்தான் ஏற்படுத்துமென்பது நிச்சயம்

ஆனால், இந்த நூல் பெண்களைப் பற்றியதாதலால், சமஸ்தானத்திலுள்ள என் சகோதரிகள் என்ன செய்யக் கூடுமென்பதைத்தான் எழுதவேண்டும். இதற்கு முன் நகர—கிராம சேவைகளுக்கு நான் சொன்னவைகளே சமஸ்தானங்களுக்கும் பொருந்தும். எப்படியாயினும் இந்திய இளவரசிகளும் தங்கள் பிரதேசங்களில் சமூக சேவைசெய்ய முன்வந்து வழிகாட்ட முடியும்; வழிகாட்ட வேண்டும்.

செயலுள்ள படித்த பெண்களாகிய நமக்கு எப்படிப் பரந்த மாதர் - சமூகத்தோடு தொடர்பில்லேயோ, அது போல அவர்களுடைய ஏழைப் பிரஜைகளிடமும் அவர்களுக்குத் தொடர்பில்லே. இந்த இடைவெளியை இணைக்கவேண்டும். ஆடம்பரம், அவசியமில்லாதவற்றிற்குச் செய்யும் அதிகச் செலவு இவைகளேக் குறைத்து இளவரசிகளும் சாதாரண வாழ்க்கை வாழவேண்டும். தங்கள் புத்திரிகளுக்குச் சரியான வழிகளில் கல்வி போதிக்க வழி செய்யவேண்டும். ஏற்கெனவே மணமான இளவரசர்களுக்குத் தம் பெண்களே மறு தாரம் ஆக்காம லிருக்கவேண்டும். இவை யெல்லாம் பின்னணியில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஸ்திரீகளாகிய நம்மால் கையாளப்படவேண்டும். கொடிய பழக்கமான பர்தாவை எதிர்த்துக் கிளர்ச்சி தொடங்கவேண்டும்.

நாகரிகமெய்திய சமூகத்தில் பழகும்படி தமது நிலைமைகளேச் சமஸ்தான மன்னர்கள் முன்னேற்றிக் கொண்டாலன்றி, சமஸ்தானத்தில் எந்த விதச் சீர்திருத்தமும் பயனற்றுப் போய்விடும். பழங்காலக் கொடும் பழக்கங்களே எதிர்க்கும் இந்திய இளவரசிகள் ஆதரவற்றிருப்பதை நான் அறிவேன். அவர்களில் பலருக்காக என் ஹிருதயம் நைந்திருக்கிறது. தம்மைக் காப்பாற்றிக்கொள்கிறவர்களேத் தானே காப்பாற்றுகிருன் கடவுள் என்பதை மனசில் கொண்டு, அந்தரங்கத்தில் தாம் வருந்துவதை நிறுத்திவிட வேண்டும். அவர்களுக்கு அனுதாபிகள் நிறைய இருக்கிருர்கள். இவர்கள் தீமை செய்பவரை எதிர்படி பொதுஜன அபிப்பிராயத்தைத் தூண்டி விடுவார்கள்.

இந்த நிலைமையிலும் இந்திய இளவரசிகள் தமது ஸ்திரீ பிரஜைகளுக்கு நல்வாழ்வும் ஒளியும் அளிப்பதற்கு இயலாதவர்களல்லர். வீடுகட்டத் திட்டம் வகுத்தல், நல்ல தண்ணீர் வினியோகம், சுகாதார முறைகள், நோய் தடுக்கும் முறைகள், வைத்திய உதவி, பெண்களுக்கும் சமமான கூலி, பிரசவ - சிசுபரிபாலன வைத்திய

3652

சாலைகள், அடிப்படைக்கல்வி, பாலர் கல்வி நிலையங்கள், குடிசைத்தொழில் கற்பிப்பதற்கான பள்ளிகள் முதலியன அமைத்தல், தீண்டாமை ஒழிப்பு, கிராம முன்னேற்றம் முதலான எல்லாச் சமூகச் சீர்திருத்த வழிகளுக்கும் திட்டம் வகுத்து அவைகளை இளவரசிகளால் நிறைவேற்ற முடியும். பிரிட்டிஷ் இந்தியாவில் நாம் அதிகார வர்க்கத்தை எதிர்ப்பதுபோல் அங்கும் நடக்காதபடி அவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கிராம முன்னேற்றம், குடியிருப்பு வசதி, தீண்டாமை ஒழிப்பு, கைத்தொழில் அபிவிருத்தி முதலியவற்றிற்குச் சில சமஸ்தானங்கள் எவ்வளவோ சாதித்திருக்கின்றன என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், இது பெருங் கடலில் சிறு துளி. ஆள்பவருக்கும் ஆளப்படுபவருக்கும் உள்ள இடைவெளி ரொம்பவும் விசாலமானது. இளவரசிகள்தான் இதை இணைக்க முயலவேண்டும். அவர்கள் தலைமை தாங்கத் தயாரானால், அவர்கள் சமஸ்தானத்திலேயே எத்தனையோ பெண்மக்கள் ஒத்துழைக்க முன் வருவார்கள். இப்போதே நமது இளவரசர்கள், எதிர் காலத்தில் குடியரசுதான் நிலைத்து நிற்கும் என்பதை அறிந்து கொள்ளட்டும். அப்படி வரும்போது, தாம் தம் குடிகளுக்குச் செய்த அபார சேவையினால் பொதுமக்கள் அவர்களையே ஏகமனதாய்ச் சமஸ்தான சர்க்காரை நிர்வகிக்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம். அது எவ்வளவு அற்புதமாயிருக்கும்!

---

# V

## சர்வ தேசியம்.

**நா**ம் நமது சுதந்திரத்துக்காகப் போராடும் போது, நம்முடைய நாட்டின் எல்லாப் பிரசினைகளும் நமது கருத்தையும் சக்தியையும் கவர்வது இயல்புதான். ஆனால் நமது நாட்டின் எல்லையைத் தாண்டிப் பார்க்கக் கூடாது என்பது முடியாத காரியம். விஞ்ஞான வளர்ச்சியினால், நாடுகள் நெருங்கி வந்துவிட்டன; ஒன்றுக்கும் மற்றொன்றுக்குமுள்ள இடைவெளி அதிக தூரமில்லை. இரண்டு உலகயுத்தங்கள், ஒரு நாட்டின் செயல் பக்கத்து நாடுகளையும், அவற்றுக்கும் அப்பாலும் பாதிக்கின்றது என்பதை நிரூபணம் பண்ணிவிட்டன. பல தேசீய இனங்களிருந்தாலும் மனுஷ்யத்துவம் அநேகமாக ஒன்றேதான். சமாதானம் நிலவ வேண்டுமென்றால், நல்லெண்ணம் நிலவக்கூடிய ஓர் உலகத்தைச் சிருஷ்டித்தாக வேண்டும். சொத்து லாபத்தைக் காட்டிலும் மனித சமுதாயத்தின் பெருமை என்று மேலானதாகப் புகழப் படுகிறதோ, அன்றுதான் ஆட்சி வெறியும், நிறத் திமிரும் ஒழிய முடியும்.

மதத்தின் பேரால், நாகரிகத்தின் பேரால் மனிதனை மனிதன் கொல்லும் இந்த மனிதத்தொடர்பு முழுமையிலும் ஏதோ பெருங் கோளாறு இருக்கிறது. இரண்டு தப்புகள் சேர்ந்தால் சரியாகிவிடாது. பகைமை பகைமையே பெருக்கும். பலாத்காரத்தால் கொள்வன எவையும் அதைவிடப் பெரிய பலாத்காரத்தால் ஒழிக்கப் பட முடியும். தங்கள் நாட்டு மக்களுக்குப் பெண்கள் கொண்டு வரவேண்டிய அடிப்படையான உண்மை இது தான்.

பழிக்குப் பழி என்ற அடிப்படைக்கும், கபடமும் கர்வமும் கொண்டு ஜயித்தவர்களுக்கும் இடையே எந்தச் சமாதான ஒப்பந்தமும் வாழ முடியாது. பெண்கள்

தான் இயல்பாகவே உயிரைக் காப்பவர்கள். வாழ்க்கை அவர்களிடமிருந்தே வளரத் தொடங்குகிறது. இன்றைக்கு நம்மைச் சிறைப்படுத்தும் குறுகிய தேசியச் சுவர்களுக்குமேலே செல்ல அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்த முடியும். எப்படி அபேதவாதம் உலகத் தொழிலாளர்களை ஒன்றுபட அழைக்கிறதோ, அப்படியே பெண்களாகிய நாமும் உலகம் ஒன்றுபடவும், உலகப் பெண்கள் ஒன்றுபடவும் எல்லாருமாகச் சேர்ந்து தம் வாழ்வைப் பயன்படுத்தவும் அழைப்போம். அன்பு அனைத்தையும் வெல்லுகிறது. நாம் மட்டும் நம்முடைய ஆத்ம வலிமையையும், எந்த விதமாகவும் தலை நிமிரும் பலாத்காரத்தை எதிர்க்கும் சாத்விகத்தையும் உணர முடியுமானால், அதுவே நாம் உலகத்திற்குச் செய்யும் பெரும் பணியாகும்.

# VI

## முடிவுரை

என் கூட்டாளிகளுக்கு நான் இதில் ஒன்றும் புதிதாகச் சொல்லிவிட்டதாக எண்ணவில்லை. ஆனால், நம்மில் ஒரு சிலரே நாம் செய்யவேண்டிய சேவைக்கு மனசார ஒத்துழைக்கிறார்கள். எங்கு எப்படி வேலை தொடங்குவது என்று தெரியாதவர்களுக்கும், அதைரியமுற்றவர்களுக்கும், என் வார்த்தைகள் ஓரளவு பயன்படும் என்று நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் இளைஞர்களைச் சேவைக்கு வேண்டியழைத்த என் வேண்டுகோள் வீணாகாது என நம்புகிறேன்.

அன்னியரார்ட்சி நம் மனப்பான்மையைக் குலைத்திருக்கிறது என்பது தெரியும். ஆத்மீக தார்மிக கலாசாரங்களைக் குலைக்கவில்லையாயினும் அளவிடமுடியாத தீங்கிழைத்திருக்கிறது. அதனால், நமது அடிமைத்தளைகள் அறுபடும்வரை ஓரளவே நாம் சாதிக்க முடியும். அந்தகார இரவின் அருணோதய நேரத்திலே இருள் மறைவது போல, சுதந்திரம் நமக்கு வந்தே தீரும். ஆனால், அந்த மகா உதய வேளைக்கு நம்மைத் தயார் செய்துகொள்ளவே 'மேலும் மேலும் சேவை செய்யுங்கள்' என்கிறேன்.

ஒருக்ஷணத் தாமதமும் இன்றி இப்போதே வேலை தொடங்கினால், எதிர்காலம் நம்முடையதாகிவிடும். கடந்தகாலம் சில பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறது. வருங்காலம் நம்பிக்கைகள் தருகிறது. ஆனால், நிகழ்காலத்தின் நல்ல பொழுதை நழுவ விட்டுவிட்டால், எதிர்கால நம்பிக்கை என்றும் நிறைவேறாது.

அந்த அருணோதயம் ஏற்படும்போது—நம்முடைய சர்க்காரின் கீழ், தீமைகளை ஒழித்து, எல்லோருக்கும் பெருநன்மை விளைக்க ஊழியர்களை அழைக்கும்போது,—

பெண்களாகிய நாம் நமது வளர்ச்சியைத் தடைசெய்த தளைகளைக் களையாது சோம்பேறிகளா யிருந்துவிட்டோம் என்ற பழி நம்மைச் சாராது பார்த்துக்கொள்ள வேண்டும். முன்னோர்களிடமிருந்து நாம் பெற்றிருப்பது மிகச் சிறந்த சம்பத்து. அதற்கு நாம் தகுதியானவர்களாக் நிரூபணம் செய்து கொள்வோம்.

---

Indian Express Branch Press, Madras.

# அனுபந்தம்

**ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் மகாத்மா காந்தி நினைவு மாலையில் ராஜகுமாரி அமிர்த கவுரைப் பற்றிப் பின் வருமாறு எழுதுகிறார் :**

நான் வர்தாவில் இருந்தபோதுதான் ராஜகுமாரி அமிர்த கௌர் மகாத்மாவைச் சந்திக்க ஆச்ரமத்திற்கு வந்தார் முதல் தடவையாக.

அமிர்த கௌர் ஒரு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்; விவாகமாகாதவர். இவர் முன்னோர் இந்துக்களெனினும், சில தலைமுறைகளாகக் கிறிஸ்து மதத்தைத் தழுவியவர்கள். இவர் தந்தையார் தம் அருமை மகளை இங்கிலாந்துக்கு அனுப்பி அங்குள்ள கல்லூரியில் படிக்க வைத்தார். எனவே அமிர்த கௌர் நடையுடை பாவனைகளில், எல்லா விதத்திலும் மேலை நாட்டு நாகரிக ஆசாரங்களைக் கைக்கொண்டார்.

இவர் தமது அந்தஸ்துக்கு ஏற்ற உயர்ந்த பட்டாடைகள், தாதி, பரிசாரகன் முதலிய வைபவங்கள் சூழ வந்தார். இவருடைய மாமா கைலாகு கொடுக்க, துவண்டு விழும் அல்லிக் கொடியென மெல்ல நடந்து, மேல்மாடியில் நாங்கள் இருந்த ஹாலுக்குள் வந்து சேர்ந்தார்.

காந்தியடிகளும் வெகு மரியாதையுடன் வரவேற்றுப் பேசினர். இரண்டு மூன்று நாள் வார்தாவில் தனி ஜாகையில் இருந்துகொண்டு, பிரார்த்தனைகளுக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்.

ஸேவாக்கிராம ஆச்ரமத்திலே இவரை நான் மறுபடி பார்த்தபோதோ,— ஆஹா. என்ன மாறுதல்! அந்த வாழ்க்கையில் ஒரு புரட்சியே வந்துவிட்டது. சாதாரண முரட்டுக் கதர்ப் புடவை உடுத்திக்கொண்டு, தாமும் ஆச்ரம வாசிகளில் ஒருவராகிவிட்டார். ஆச்ரமத்துச் சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். வெட்ட

வெளியில் மைதானத்திலே மற்ற ஆச்ரம வாசிகள்போல் தரையிலே. படுக்கை விரித்துப் படுத்துக்கொண்டும், மற்ற ஆச்ரம நியமங்களுக்கு உட்பட்டும், தூய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். மஹாதேவ தேசாயின் அலுவல்களையும் தாம் மேற்கொண்டு சதா மகாத்மாவின் பக்கத்திலிருந்து கடிதப்போக்கு வரத்துகளையும் கவனித்து வந்தார்.

முன் பாராத அமிர்த கௌருக்கும் இப்போதுள்ள அமிர்த கௌருக்கும் எவ்வளவு வித்தியாசம்! புனர் ஜன்மம் எடுக்காமலே புதிய பிறவி பெற்றுப் புது வாழ்வு வாழும்படி செய்யவல்ல ஸித்தரல்லவா மகாத்மா?

3652.

# தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு] … | 0 | 12 |
| 2. | ரவீந்திரநாத தாகூர் … | 0 | 8 |
| 3. | கைலாஸம்-மானஸஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை) | 0 | 8 |
| 4. | போலந்து—பின்லந்து … | 0 | 12 |
| 5. | சிறு கதை மஞ்சரி … | 1 | 0 |
| 6. | ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள் … | 2 | 0 |
| 7. | இல்லைக் கோவிந்தன … | 1 | 0 |
| 8. | அன்னை கஸ்தூரிபா … | 0 | 12 |
| 9. | முன்னிலா … | 0 | 12 |
| 10. | தளவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்) … | 0 | 12 |
| 11. | மௌலானா ஆஸாத் … | 1 | 0 |
| 12. | கதை வனம் … | 1 | 0 |
| 13. | நவ ரஸங்கள் … | 0 | 12 |
| 14. | வீர ருஷ்யா (பாகம் I) … | 0 | 12 |
| 15. | காந்தியத் திட்டம் … | 1 | 8 |
| 16. | தற்காலப் போர்க் கருவிகள் … | 1 | 0 |
| 17. | கதா நாடக மஞ்சரி … | 0 | 8 |
| 18. | வீர ருஷ்யா (பாகம் II) … | 0 | 8 |
| 19. | கபீர்தாஸர் … | 0 | 8 |
| 20. | ஐசுவரிய அமெரிக்கா … | 0 | 8 |
| 21. | தஞ்சை நாயக்கர் … | 0 | 8 |
| 22. | ஜீவ கலை … | 0 | 8 |
| 23. | அமிர்த சந்திரன் … | 1 | 0 |
| 24. | சீனா … | 0 | 8 |
| 25. | உத்தம வாழ்க்கை … | 0 | 8 |
| 26. | ஜனநாயகப் பிரச்னைகள் … | 0 | 8 |
| 27. | என் தந்தையார் … | 0 | 8 |
| 28. | புரட்சி முரசு … | 0 | 8 |
| 29. | இன்றைய தமிழ் வசன நடை … | 1 | 0 |
| 30. | கோவில் பூனைகள் … | 0 | 8 |
| 31. | ஹாஸ்யக் காட்சிகள் | அச்சில் | |
| 32. | கன்னியர் வீரம் … | 0 | 8 |

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)